Regd. No. M. 2797. ாட்டிப் பரிசு—பக்கம் 5. (விலை



VARTHAGA OOLIAN.

மலர் 1.] திருச்சினாப்பள்ளி மார்ச்சு-மீ 1933 [இதழ் 9

Trichinopoly ஆசிரியர்:—திரு. டி. வி. கே. நாயுடு March 1933

வர்த்தக முன்னேற்றங் கருதி
வெளிவரும் மாதப் பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR 15 MAR 1933 MADRAS

SRINILAYAM PRESS ARTISTIC COLOUR PRINTERS, BIG BAZAAR, TRICHINOPOLY

அட்டவணை.

வியாபார நுணுக்குகள் ... 4
ரயில்வே பகுதி 5
மகாமகம் 5
ரயில்வே ரேட் 6
சிறுமணித்திரள் 9
இரும்பு வியாபாரம் 10
ராஜம் (கதை) 11
இந்தியாவில் பொக்கிஷ நிலைமை ... 13
ஜர்மனியில் இந்திய வியாபாரம் 14
நாணய மாற்றம் 16
கப்பல் செய்தி 16
India's Exports 17

வியாபாரத்திற்கு — —
— — விளம்பரஞ் செய்தல்.

Broadcast your business messages — —
— — through "Varthaga Oolian"
A MONTHLY TRADE JOURNAL
BEST MEDIUM For ADVERTISEMENT
Subscription One Rupee per annum.

S. RETHINAVELU CHETTY,

SHROFF MERCHANT,
BIG BAZAAR STREET, TRICHINOPOLY,

All kinds of Jewels set with No. 1 Indian Chemical Diamond, the best in the Market, can be Supplied at cheap rates.

சி. ரெத்தினவேலுசெட்டி

ஷராப் வியாபாரம், பெரியகடைவீதி திருச்சி.

நெ. 1 இந்தியன் கெமிகல் டைமண்டு

குணத்தில் சிறந்தது. விலையில் குறைந்தது. கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு எமது மேற்பார்வையில் தயார் செய்யப்பட்டது. நெ. 1 இந்தியன் கெமிக்கல் டைமண்டு கற்கள் உறுதியிலும் பிரகாசத்திலும் அசல் வைரங்களுக்கு ஒப்பாக விளங்குகின்றன. ஒரு முறை வரவழைத்துப்பார்த்தால் உண்மை விளங்கும் 1நெ. இந்தியன் கெமிகல் டைமண்டு கற்களைக்கொண்டு பவுனில் கட்டப்பட்ட பலவிதமான நகைகளும் அசல் 1நெ. ரங்கூன் புது வைரங்கள் இமிடேஷன் புஷ்பராகம் தளுக்கு படிக்கம் இமிடேஷன் பட்டை சிகப்பு, பூரு குச்சை பிளேன் பட்டை சிகப்பு, நீலம் திரிகலர், பச்சை முதலிய கற்களும் வர்ணத்தகடுகள் முதலியவைகளும் சரக்கு சுத்தமாயும் விலை சரசமாயும் எம்மிடம் கிடைக்கும்.

மேற்கூறிய தினுசுகளில் 2-ம் நெ. கற்களும் கைவசமிருக்கின்றன.

வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து அனுப்பப்படும் விலை விபரங்களுக்கு எழுதுக.

இனாம்! இனாம்!!



என் அனுபவசாஸ்திரீய

தேகாப்பியாச முறை

இது எல்லோருக்கும் இனாமாக அளிக்கப்படும்.

இப்புத்தகத்தில் தேகாப்பியாச முறையைப்பற்றி நன்றாக விவரித்து எழுதப்பட்டிருக்கின்றது. இது தவிர என்னுடையதும் மற்றும் என்னுடைய சிஷ்யர்களுடையதுமான அநேக புகைப்படங்கள் தெளிவாக அச்சிடப்பட்டிருக்கின்றன, எவன் தன் தேகத்தை அபிவிருத்தி செய்து ஆரோக்கியமாக இருக்க விரும்புகிறானோ அவன் இப்புத்தகத்தை வாசிக்க வேண்டும்.

தபால் சார்ஜுக்காக இரண்டு அணா இந்திய போஸ்டல் ஸ்டாம்பு அனுப்பவும்.

பிரபோசர்: **எம். வி. கிருஷ்ணராவ்,**
உதகமண்டலம், (நீலகிரி.)

15 MAR 1933
MADRAS
SRI NILAYAM PRESS
ARTISTIC COLOUR PRINTERS,
BAZAAR, TRICHINOPOLY.

BRILLIANT RANGOON KAMALAM.

Can be had in retail also at moderate prices.

Our Brilliant Rangoon Kamalam polished with diamond dust, manufactured in our Diamond Cutting Factory, under the



Expert supervision of highly qualified and well experienced hands, in electric current machines.

A trial is solicited.

From :— **T. B. Govindararajaloo Naidu,**

Burma Chemical Works & Jeweller, 142, Mogul Street, RANGOON.

எனது புதிய தொழிற்சாலையில், கைதேர்ந்த தொழிலாளர்களைக்கொண்டு எனது மேற்பார்வையில் தயார் செய்யப்படும் ரேங்கூன் கமலங்கள் எலக்டிரிக் சக்கர சாணையில் வைர வடியைக்கொண்டு மெருகு தீட்டி அசல் வைரங்களுக்கு ஒப்பான பிரகாச பூரிப்புடன், சுத்தமாக பட்டை தீர்த்து குறைந்த விலைக்கு இந்தியாவில் எல்லா பாகங்களுக்கும் ஏராளமாக அனுப்பப்பட்டு வருகின்றன.

எனது வர்த்தகம் எல்லா ஊர்களிலும் விருத்தியாகி, வியாபாரிகள் தக்க லாப அடையும்பொருட்டு, எங்கள் ஊர் நிலவரத்திற்கும் சரசமாய் சரக்குகள் மொத்தமாயும் சில்லரையாகவும் அனுப்பி வருகின்றேன்.

ஷை ரெங்கூன் கமலங்களில், பவுனினால் கட்டப்பட்ட பலவித நகைகளும், இமிட்டேஷன், பட்டை சிகப்பு, குச்சை சிகப்பு, பிளேயின் பட்டை, நீலம் திரிகலர், பச்சை, தளுக்கு படிக்கம், படிக்கம், முதலிய கற்களும், தங்கம், வெள்ளி வர்ணத்தகடுகளும், கைவசம் தயாராய் இருக்கின்றன.

தாங்கள் இதுவரையில் எங்களூர் வியாபாரிகளிடம், ஏராளமான சரக்குகள் தருவித்திருந்த போதிலும், ஒரு தடவை ஸ்பெஷலாக எனது ரெங்கூன் கமலங்களுக்கும், நகைகளுக்கும் ஒருமுறை ஆர்டர் கொடுத்து வரவழைத்துப் பார்த்தால் எனது சரக்குகளின் உயர்வும், விலை சகாயமும் நன்கு தெரியும்.

தங்கள் தேவைக்கு இன்றே ஆர்டர் எழுதுங்கள்.

T. B. கோவிந்தராஜலு நாயுடு,
பர்மா கெமிகல் ஒர்க்ஸ் & நகை வியாபாரம்,
142, மொகல் ரோடு, ரேங்கூன்.

வியாரத் துணுக்குகள்.

(*Trade Tit Bits.*)

ஒட்டவா ஒப்பந்தம் காரணமாக இங்கிலாந்தில் 200 புதியகம்பெனிகள் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டன. அதிகமாக 400 தொழிற்சாலைகளுக்கு மனுக்கள் வந்திருக்கின்றதாம்.

* * *

1932-ளு டிசம்பர்-மீ 25உயோடு கரும்பு சாகுபடி இம் மாகாணத்தில் 125220 எக்கர். சென்ற வருடம் 116, 530 எக்கர். 345930 டன் வெல்லம் எதிர்பார்க்கப்படுகிறது. 500 பவுன் எடையுள்ள கண்டி 24 ரூபாய் முதல் 33 ரூபாய் வரையில் விற்றது.

* * *

1932-ளுத்தில் இம்மாகாணத்தில் எள் சாகுபடி 634500 எக்கர். சென்ற வருடம் 541900 எக்கர், 83,600 டன் எள் கிடைக்கும். 1932-ளு நவம்பர் மாதத்தில் ரூபாய்க்கு 10 முதல் 13 பவுன்டுவிற்றது. இப்பொழுதுசிலவிடங்களில் 10 முதல் 15 பவுன்டு விற்றது.

* * *

பம்பாய் இந்திய வியாபார சங்கம் இந்தியா கவர்ன்மெண்டு பொக்கிஷ இலாகா காரியதரிசிக்கு எழுதியுள்ள கடிதத்தில் வருமான வரியை குறைத்து சவுகரியம் செய்தால் வியாபாரம் செழிக்க இடமேற்படு மென்றும் அதனல் வருமானமும்அதிகரிக்குமென்றும் குறிப்பிட்டிருக்கின்றது.

* * *

நிலக்கரியிலிருந்து பிரிட்டிஷ் கப்பற் படைக்கு எண்ணெய் தயாரித்து கொடுக்கும்படி ஒரு பிரிட்டிஷ் கம்பெனிக்கு ஒரு வருட கண்டிராக்ட் கொடுத்திருக்கிறது. புகையில்லாமல் எரியக் கூடிய எண்ணெய் நிலக்கரி துண்டுகளிலிருந்து கிடைப்பதுடன், வேறு பல சரக்குகளும் தயாரிக்கப்படுகிறது.

* * *

மலபார் தேசத்தில் தேங்காய் வியாபாரம் சுணக்கமானதின் காரணமாக பலர் அவதிப்படுகின்றார்கள். இதை முன்னிட்டு பிரிட்டிஷ் கொச்சி முனிசிபால் சங்கத்தார் இந்திய கைத்தொழிலை ஆதரிக்க இலங்கையிலிருந்தும் இன்னும் மற்ற இடங்களிலிருந்தும் இறக்குமதியாகின்ற கொப்பரைக்கும், தேங்காய் ... அதிகவரி விதிக்கவேண்டு ... கவர்ன்மெண்டு ...

இந்திய சட்டசபையில் அரிசி விலை இறங்கி விட்டது கவர்ன்மெண்டுக்குத் தெரியுமா யென்றும், அன்னிய தேச அரிசி இந்தியாவுக்கு ஏராளமாகவருவது தெரியுமா யென்றும், அன்னியதேச கோதுமையின்மேல் இறக்குமதி தீர்வை போடக்கூடாதா என்றும் கேள்விகள் கேட்டதற்கு விலைஇறங்கிவிட்டது தங்களுக்கு தெரியுமென்றும், 26 ஆயிரம் டன் இறக்குமதியாகி யிருக்கிறதென்றும், வரிவிதிப்பது சரியல்ல வென்பது தங்களுடைய அபிப்பிராய மென்று தங்களுடைய அபிப்பிராய மென்றும் கவர்ன்மெண்டார் பதில் சொன்னர்கள்.

* * *

ஹங்கேரியின் தென்மேற்கு பாகத்திலுள்ள எக்சட் என்ற இடத்தில் பிராந்தி வியாபாரம் செய்யும் ஒரு பிரபல வர்த்தகர் இருக்கின்றார். அவரிடம் ஏராளமான பிராந்தி யிருந்தும் விற்றால் போதுமான லாபம் கிடைக்காமல் எடுபிடி செலவுக்குக்கூட கட்டவில்லையாம். ஆகையால் பிராந்தியை அவர் விற்பதற்குப் பதிலாக அதனுடைய ஆவியை விற்கின்றாராம். குளிக்கும் அறையில் ஜலத்திற்கு பதிலாக பிராந்தியை விட்டு அந்த புகை அறை முழுதும் சூழ்ந்து கொண்டதின்மேல் அதில் ஸ்நானம் செய்ய ஏற்பாடு செய்திருக்கின்றார். இவ்விதம் செய்வதால் வலிகளுக்கு சௌக்யம் ஏற்படுகிறதாம். ஏராளமான ஜனங்கள் அங்கு செல்லுகின்றனர்.

* * *

ரஷியா தேசத்தில் கோர்க்கி என்ற ஊரில் மனிதர்களின் மயிரினல் செருப்புகளை தயார் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் செய்து ஒரு தொழிற்சாலையை கூடிய சீக்கிரத்தில வைக்கப் போகிறார்கள். இதற்காக இதுவரையில் ஏராளமான மயிர்கள் சேகரிக்கப்பட்டாய்விட்டது. வருட மொன்றுக்கு 1500 டன் மயிர் கொடுக்கவேண்டு மென்று மாஸ்கோவிலுள்ள 550 மயிர்வெட்டும் சலூன்களின் சொந்தக்காரர்களிடம் ஒப்பந்தம் பேசியிருக்கின்றார்கள். ஒரு டன் மனித மயிருடன் ஆட்டு மயிரையும் (wool) சேர்த்தால் ஆயிரம் ஜதை செறுப்பு செய்ய முடியுமாம். வீணய் எறியப்படும் மயிரிலிருந்து மாஸ்கோ நகரத்தில் வருடம் ஒன்றுக்கு சுமார் 15 லட்சம் செறுப்புகள் தயாரிக்கப்போகின்றார்கள்.

* * *

ஆஸ்டிரேலியாதேசத்திலுள்ள மொராவிய டவுனில் உள்ள ஒருவர் வரி பளுவை தாங்கமுடியாமல் அன்றுபிறந்த குழந்தையுடன் சேர்த்து ஐந்து பிள்ளைகளையும்வரிவசூல்செய்யுமிடத்தில் ரெவினியூ ஆபீசர் முன்னிலையில் போட்டுவிட்டு போய்விட்டார். ஒரு பிள்ளையின் கழுத்தில், என்னுடைய வருமானத்தையெல்லாம் வரிக்காக எடுத்துக்கொண்டீர்கள். என்னிடம் மீதி யிருப்பது இந்த பிள்ளைகள் தான் என்று எழுதி தொங்கவிடப்பட்டிருந்ததாம்!

* * *

இந்திய கவர்ன்மெண்டாருக்கு வட ஆற்காடு ஜில்லா மணிலா வியாபாரிகளது குறைகளைத் தெரியப்படுத்துவதற்காக ஆரணியில் ஜனப் எம். அப்துல் ஷகூர் சாகிப் மணிலா வியாபார ஸ்தலத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் பிரபல வியாபாரிகளும் விஜயம் செய்திருந்தார்கள். சில முக்கியஸ்தர்களும் திரு. ஏ. வி.கன்னைய நாயுடுவும் கால தேச வர்த்தமானங்களைப் பற்றியும், வியாபார நெருக்கடியைப் பற்றியும் பேசி முடிந்தபின் ஜனப் எம். அப்துல் ஷகூர் சாகிப் அவர்களால் ஆரணி மணிலா வியாபார சங்கத்தின் சார்பாக இந்தியாகவர்ன்மெண்டுக்கு ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டது. அவ்வறிக்கையானது:— "இவ்வருஷம் காலமழை தவறி விட்டபடியால், நிலக் கடலை செடிகளின் மாசூல் மிகவும் குறைந்திருக்கின்றது. விவசாயிகள் மேற்படி மாசூலையே முக்கியமாக நம்பி இருந்தார்கள். காலவித்தியாசத்தினல் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தினல் தங்கள் நிலங்களில் உற்பத்தியான மணிலா காய்களையாவது விலையுடன் விற்று இவ்வருஷ செலவை கழிக்க எத்தனித்திருந்தார்கள். இதர தேசத்திலிருந்து மணிலாபயிர் வாங்கும், வர்த்தகர்கள். ஒரே கட்டாக விலையை உயர்த்தாமல், குறைத்தே வருவதால் வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் பெரும் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. இதை இந்தியா கவர்ன்மெண்டார் கொஞ்சம் கவனித்து இனி வாங்கக்கூடிய இதரதேச வியாபாரிகள் அலாஸ்தேஸ் துறைமுக டி... வரிக்கு டன், 1-க்கு 15-பவுன... குறைக்காமல் விலை கொடுக்க வே... மென்கிற உத்திரவை பிறப்பித்த... படி வியாபாரிகளையும் ரயத்து... பாதுகாப்பு செய்ய வேண்டி... கள்."

ரயில்வே பகுதி.

(Railway Matters.)

கீழ வங்காள ரயில்வேக்கு போதுமான வருமானம் கிடைக்கவில்லையென்று சாந்திபூர் நாபாட்விப் லைட் ரயில்வேயின் ஓர் பாகமான சாந்திபூர் கிருஷ்ணகர் செக்ஷனை மூடிவிட தீர்மானித்து விட்டார்கள்.

* * *

ரயில்வே கம்பேனிக்காரர்களும் மோட்டார் பஸ்கள் விடலாமென்று சட்டம் கொண்டுவருவதை கல்கத்தா இந்தியன் சேம்பர் ஆப் காமர்சு ஆதரிப்பதுடன் ரயில்வே கம்பேனியார் போட்டி போட்டு ரேட்டுகளை குறைக்காமலிருப்பதற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தி ரேட்டுகளை நிர்ணயப்படுத்தும்படியாக சிபார்சு செய்திருக்கிறது.

* * *

ஆஸ்டிரியா தேசத்தில் ரயில்வே அதிகாரிகள் ரயிலில் பிரயாணம்செய்ய லாட்டரி ஏற்படுத்தி யிருக்கின்றார்கள். ஒரு டிக்கட் ஒரு ஷில்லிங் வீதம் ஐந்து லட்சம் டிக்கட்டுகள் விற்கப்படும். லாட்டரியில் ஜயமடைந்தவர்கள் அந்த ரயில்வேயில் 1500 மைல்கள் இனாமாக பிரயாணம் செய்யலாமென்றும், இந்த லாட்டரியில் கலந்துகொண்டிருக்கும் 120 ஹோட்டல்களில் 30 நாள்கள் தங்கலாமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கணவனும் மனைவியும் சேர்ந்து பிரயாணம் செய்ய இரண்டு டிக்கட்டுகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. லாட்டரி குலுக்கும் தேதி 3-6-33 வியன்னாவுக்கு சமீபத்திலிருக்கும் பேடன் என்ற ஊரில் சீட்டு குலுக்கப்படும். ரயில் வருமானத்தை விருத்தி செய்ய இவ்வழியை அத்தேசத்தார் கண்டுபிடித்திருக்கின்றார்களாம்.

* * *

மைசூர் ரயில்வேயில் வளர்ப்பதற்காக உயிருள்ள மீன்களை அனுப்பினால் முழு பார்சல் ரேட் சார்ஜ் செய்யப்படுமாம்.

* * *

பெஜவாடா மார்க்கமாக சென்னைக்கு வரும் நிலக்கரி, முதலானவைகளுக்கு 100க்கு 15 வீதம் சர் சார்ஜ் அதிகப்படியாக கொடுக்கவேண்டுமாம்.

* * *

வடமேற்கு ரயில்வேயில் 1933-ம் வருடம் மே மாதம் 1உ யிலிருந்து குருக்ஷேத்ரா ஸ்டேஷனுக்கும், தானீசார் [illegible]ட்டி ஸ்டேஷனுக்கும் செல்கின்றவர் [illegible]டமிருந்து ஆள் ஒன்றுக்கு ஒரு அணா [illegible] வசூலிக்கப்படுமாம்.

மஹாமக உற்சவம்

(Mahamaham.)

மகாமகத்துக்கு செல்லும் பிரயாணிகளின் சௌகர்யங்களை தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியாராலும் நன்றாய்க் கவனிக்கப்பட்டு கீழ்க்கண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கும்பகோணத்திற்கு அநேக ஸ்பெஷல் வண்டித்தொடர்கள் விடப்படும். மாயவரத்திற்கும் தஞ்சாவூருக்கும் மத்தியில் 40-நிமிஷங்களுக்கொருமுறை இரு பக்கங்களிலும் வண்டிகள் ஓடும், மேலும் நெருக்கடியான நேரங்களில் 20-நிமிஷங்களுக்கொருமுறை கும்பகோணத்திற்கு வரவும் அவ்விடத்திலிருந்து போகவும் வண்டிகள் உண்டு.

திரும்புகாலையில் பிரயாணிகள் நெருக்கம் அதிகமாயிருக்கும், ஆனாலும் அவர்கள் எவ்வளவு துரிதமாய் வெளிச்செல்ல வேண்டுமோ அவ்வளவு ஏற்பாடுகளும் செய்யப்படும்.

கும்பகோணத்திற்கு வந்துபோகும் பிரயாணிகளுக்கு தெற்கே தஞ்சாவூர் மார்க்கத்திற்கு **நீலவர்ண** டிக்கட்டுகளும், வடக்கே சென்னை மார்க்கத்திற்கு **சிகப்புவர்ண** டிக்கட்டுகளும் கொடுக்கப்படும்.

மூன்றாவது வகுப்பு பிரயாணிகள் தங்குவதற்கு 5 பெரிய கொட்டகைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த கொட்டகைகளில் நீலம் அல்லது சிகப்பு அடையாளங்கள் உண்டாகையால் பிரயாணிகள் வண்டியேறுமுன் எந்த கொட்டகைக்குள் போகவேண்டுமென்பதை எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

இந்த கொட்டகைகளுக்கு வெளியே டிக்கட்டு கொடுக்குமிடங்கள் (புக்கிங் ஆபீஸ்கள்) இருக்கின்றன. ஸ்திரீகளுக்கு தனியான டிக்கட்டு கொடுக்குமிடம் உண்டு.

உற்சவநாட்களில் பிளாட்பாரம் டிக்கட்டுகள் கொடுக்கப்படமாட்டா.

2-வது வகுப்புக்கும், 3-வது வகுப்புக்கும் தனித்தனி டிக்கட்டு கொடுக்குமிடமும், பிரயாணிகள் தங்கும் அறைகளும் இருக்கின்றன.

பிரத்தியேகமான தண்ணீர், சுகாதார, வைத்திய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒருஇந்துக்கள் போஜனசாலையும், ஒருமகமதியர் போஜனசாலையும், பல பழக்கடைகளும், சிற்றுண்டி, சாலைகளும் இருக்கின்றன.

போட்டிப் பரிசு

(Prize Competition.)

"எந்த வர்த்தகத்தை ஆரம்பிப்பது"

"எந்த வர்த்தகத்தை ஆரம்பிப்பது" என்ற விஷயமாக, கீழ்கண்ட குறிப்புகளைக்கொண்டு வர்த்தக ஊழியன் இரண்டு பக்கங்களுக்குள் அடங்கும்படியாக வியாசம் எழுதி ஏப்ரல் மாதம் 20 உக்குள் பத்திராதிபருக்கு வந்து சேரும்படியாக அனுப்பவேண்டும். முதன்மையாக யிருந்த வியாசத்துக்கு ஐந்து ரூபாயும் இரண்டாவதாக யிருந்த வியாசத்துக்கு இரண்டு ரூபாயும் கொடுக்கப்படும். மற்றவர்களுக்கு ஒரு வருடத்திற்கு பத்திரிகையை இனாமாக அனுப்பப்படும்.

குறிப்புகள்:—(1) இன்ன வியாபாரம் (2) ஆரம்பத்தில் ஏற்படும் இடையூறுகள் (3) எவ்விதம் அவைகளை நிவர்த்தி செய்வது (4) வர்த்தகம் செய்பவர் நடந்து கொள்ளவேண்டிய வழிகள் (5) அந்த வர்த்தகத்துக்கு என்ன புஸ்தகங்கள் வாசிக்கவேண்டும் (6) எவ்விதம் அந்த வர்த்தகத்தை விருத்தி செய்வது (7) போட்டியை எப்படி சமாளிப்பது (8) எப்படி விளம்பரம் செய்வது (9) அதனால் கிடைக்கும் லாபம் (10) எவ்வளவு மூலதனம்.

பத்திராதிபர்,
வர்த்தக ஊழியன்,
திருச்சினாப்பள்ளி.

ஜனங்கள் நுழையும் வாசல்களிலும், டிக்கட்டு வாங்கும் ஜன்னல்களிலும், கூட்டம் போட்டு நெருக்காதபடி பிரயாணிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அப்படிச் செய்வதினால் பிரயாணிகளுக்குச் சிரமமேற்படுவதல்லாமல், ரெயில்வே சிப்பந்திகளுக்கும் கஷ்டம் உண்டாகி டிக்கட்டு கொடுப்பதிலும் தாமதமேற்படுகிறது.

வண்டித்தொடர்கள் போக்குவரத்தையும், மற்றும் ஜனங்களுக்கு வேண்டிய விஷயங்களையும் தெரிவிப்பதற்கு, பிரயாணிகள் தங்கும் கொட்டகைகளிலாவது அவைகளுக் கருகாமையிலாவது ஒலிபெருக்கிகள் உபயோகிக்கப்படும்.

ரெயில்வே விசாரணை ஆபீஸ் [illegible] ஏற்படுத்தப்பட்டிருக்[illegible]

ாமான்களுக்கு ரயில்வே சார்ஜுகள். (RAILWAY RATES)

சாமான்கள்	எங்கிருந்து	எந்த இடத்துக்கு	ரேட்டு மணங்குக்கு		எந்ததேதியிலிருந்து	ஷரா
			அ.	பை.		
விறகு	அங்காடிபுரம்	ஆல்வாய்	2	0	1—2—33	
,,	மெலட்டூர்	,,	2	0	,,	
,,	நிலாம்பூர் ரோடு	,,	2	0	,,	
,,	வாணியம்பலம்	,,	2	0	,,	
,,	அங்காடிபுரம்	எர்ணகுளம்	2	0	15—2—33	
,,	மெலட்டூர்	,,	2	0	,,	
,,	நீலாம்பூர் ரோடு	,,	2	0	,,	
,,	வாணியம்பலம்	,,	2	0	,,	
,,	அய்யலூர்	மதுரை	2	6	1—3—33	
,,	கடலண்டி	,,	4	0	1—2—33	
,,	கல்பட்டி சத்திரம்	,,	2	7	1—3—33	
,,	மணப்பாரை	,,	2	9	,,	
,,	ஒட்டன்சத்திரம்	,,	2	7	1—2—33	
,,	பாண்டிகண்மாய்	,,	2	6	,,	
,,	பரமக்குடி	,,	2	6	,,	
,,	வடமதுரை	,,	2	6	1—3—33	
,,	வையம்பட்டி	,,	2	9	,,	
,,	நெல்லிகுப்பம்	சென்னை பீச்	3	2	25—1—33	
,,	பாண்டியாபுரம்	திருநெல்வேலி	1	8	7—2—33	
நிலக்கடலை	காஞ்சீபுரம்	சென்னை பீச்	3	7	1—2—33	30—4—33 வரை
,,	தேனி	திண்டுக்கல்	2	6	12—2—33	
தள்ளுபடிகாகிதம	சென்னை பீச்	புனலூர்	7	3	10—2—33	
கரும்பு	வல்லம்படுகை	நெல்லிகுப்பம்	1	0	25—1—33	
,,	விக்ரவாண்டி	,,	0	10	5—2—33	
ஓடுகள்	மங்களூர்	எடக்காடு	1	3	15—2—33	
தேக்கு	மேலட்டூர்	பெரோக்	1	6	1—2—33	
,,	நிலாம்பூர்ரோடு	,,	1	6	,,	
,,	வாணியம்பலம்	,,	1	6	,,	
,,	மேலட்டூர்	கல்லாயி	1	6	,,	
,,	நிலாம்பூர்ரோடு	,,	1	6	,,	
,,	வாணியம்பலம்	,,	1	6	,,	
,,	மேலட்டூர்	ஒலவக்காடு	2	0	,,	
,,	நிலாம்பூர்ரோடு	,,	2	6	,,	
,,	வாணியம்பலம்	,,	2	3	,,	
விறகு	அங்காடிபுரம்	ஆல்வாய்	1	7	,,	1500 டன் 1933 ஞூடிசம்பர்மீ 31உக்குள் அனுப்பினால் ரிபேட் கிடைக்கும்.
,,	மெலட்டூர்	,,	1	7	,,	
,,	நிலாம்பூர்ரோடு	,,	1	7	,,	
,,	வாணியம்பலம்	,,	1	7	,,	
,,	அய்யலூர்	மதுரை	2	5	1—3—33	இந்த தேதியிலிருந்து இந்த ரேட்டுகள் ரத்து செய்யப்படும். (ஜனவரி மாதப் பத்திரிகையை பார்க்கவும்.)
,,	திண்டுக்கல்	,,	2	5	,,	
,,	கல்பட்டி சத்திரம்	,,	2	5	,,	
,,	மணப்பாரை	,,	2	5	,,	
,,	வடமதுரை	,,	2	5	,,	
,,	வையம்பட்டி	,,	2	5	,,	
தேங்காய்	படகாரா	வெஸ்ட்ஹில்	1	0	31—5—33	இந்த தேதி வரையில் அமுலிலிருக்கும். (டிசம்பர்மாத சஞ்சிகையை பார்க்கவும்.)
மிளகாய்	சாலிமார்	எர்ணகுளம்	20	0	20—1—33	
மாவு	கள்ளிக்கோட்டை	மைசூர்	12	0	1—2—33	
,,	,,	நஞ்சன்கோடு	12	0	,,	
கண்ணாடி சாமான்கள்	சாஸ்னி	கோயில்பட்டி	13	4	,,	
,,	,,	மதுரை	11	4	,,	
	,,	புதுக்கோட்டை	9	1	,,	

M. SULTAN ABDUL KADER.,

Sultania Medical Hall, Porto-Novo. S. A. District, India.

இதனை வாசிக்கும் புத்திமான்களுக்கும் பக்திவான்களுக்கும் ஓர் விண்ணப்பம்.

இழந்துபோன பலத்தை 1-வேளை லேகியம் சாப்பிட்ட 1-மணிநேரத்தில்கொடுக்கும்

கவனியுங்கள் ! —— **கவனியுங்கள் !!**

பர்மா கவர்னரின் டாக்டர் சர்டிபிகேட்.

நான் இரங்கூன் பஞ்சசக்தி கம்பெனியிலிருந்து பரங்கிப்பேட்டை சுல்தானியாவைத்தியசாலை சொந்தக்காரரால் செய்யப்பட்ட சிட்டுக்குருவி சத்தின் லேகியம் வரப்பெற்று அருந்திப்பார்த்தேன். அது தேகவலுவையும் வீரிய விர்த்தியையும் தாது புஷ்டியையும் கொடுக்கிறது. இன்னும் இந்தலேகியத்தில் அனேக குணங்களிருக்கின்றன,

டாக்டர் சையத்மேஜர் அலிகான் சாகிபு,
கவர்னர் மாளிகை, பர்மா. 20—12—1924.

கொழும்பு போலீஸ் மாஜிஸ்டிரேட் மகாகனம் பொருந்திய H. P. கப்மான்ஸ் அவர்களால் 6–12–1927ல் 864 நெ. ரிபோர்ட்டு. ஸிலோன் கவர்ன்மெண்டு அன்லிஸ்ட் (மருந்து பரிசோதக அதிகாரி) மகாகனம் பொருந்திய C. T. ஸைமன்ஸ் அவர்களுக்கு அனுப்பி 13—12—1927ல் பரிசோதனை செய்தது. ரிபோர்ட்டு நெ. 880, 13—12—1927.

மெடல்பெற்ற சிட்டுக்குருவி சத்தின் லேகியம்.

நண்பிந்துகந்த அன்பர்காள்! அருமையும் பெருமையும் கீர்த்தியும்பெற்ற இந்த அற்புத குணந்தங்கிய லேகியத்தை உபயோகித்த உத்தமர்கள் குணத்தால் சிறந்ததுதான் என்று இதனைப் பன்முறையும் புகழுவார்கள். இச்சிறந்த அபூர்வ லேகியத்தை உபயோகித்தால் உற்சாகமடைவீர்கள் பண்டைகாலத்தரசர்கள் தத்துவங் குறையாது வாழ்ந்திருந்தார்களென அரபி பார்சி கதைகளிலும் தமிழ் புராணங்களிலும் வாசித்திருக்கிறோமல்லவா? அத்தகைய குணத்தை தரக்கூடிய அற்புத சஞ்சீவிகளில் இந்த சிட்டுக்குருவி சத்தின் லேகியமும் ஒன்றென்பதை அனுபவத்தால் அறிந்து கொள்வீர்கள். இது எங்கள் முன்னோரின் எட்டுப்பிரதியிலுள்ள அனுபவ முறை.

இந்த லேகியம் அசல் பாகத்திற்கோர் விகற்பமின்றி தங்கம், வெள்ளி, செம்பு, பவழம் ஆகிய பஸ்பம் செந்தூரங்களும், அம்பர், கஸ்தூரி, குங்குமப்பூ, எட்டுவித மிஸ்ரிகள், பத்துவகை விதைகள், எழுவகை மூலிகை, சூரணங்கள் ஐந்துவேர் வகைகள், மற்ற அருமையான சரக்குகள் (192-ம்) நிறையளவு குறையாதபடி பாகஞ்செய்து வாலையந்திரத்திலிறக்கிய சிட்டுக்குருவி சத்தும் சேர்த்துப் பாகமாய்ச் செய்யப்பெற்றது.

இந்த சிட்டுக்குருவியின் குணத்தைப்பற்றி சிந்தாமணி என்னும் சாஸ்திரத்தில் சித்து புருஷரின் உத்தம வாக்கியமும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பலகாலும் பலபேருக்கும் கொடுத்து யாம்கண்ட உபயோகத்தையும் சொல்கின்றோம்.

லேகியத்தின் குணமாவன.

வாதபித்த சிலேத்ம மிகுதிக்குறைவால் ஏற்படும் இரத்தக் குறைவு, எழுவகைத் தாதுக்களின் பலஹீனம் அஸ்திவெட்டைச்சூடு, வீரிய நஷ்டம், சதா இடுப்புவலி, மலச்சிக்கல், பசிமந்தம் பித்தாதிக்க உஷ்ணவாய்வு கிருமிரோகம், துர்நீர்வியாதிகள், தேகத்தில் ஓடித்திரியும் பலவகை வாய்வுரோகம், பார்சவாய்வு நெஞ்சுவலி, விரைவாதம், கைகாலசதி, மறதி, மனோசக்தி நாளுக்குநாள் குறைதல் முதலியன நிவர்த்தியாகிவிடும். தேக உஷ்ணத்தை சமனப்படுத்தி இரத்தத்தை விர்த்திசெய்து புத்திசாதுர்யத்தைக் கொடுத்து தேகத்திற்கு நல்ல பலத்தை உண்டாக்கும். இந்த லேகியத்தை பால்யர் முதல் வயோதிகர் வரையில் சாப்பிட்டால் தேகத்திற்கு நல்ல பலத்தைக் கொடுக்கும். இதை ஒருதரம் பரீக்ஷை செய்து பார்க்கவும்.

40-நாள் சாப்பிடும் 16-பலம் டப்பி விலை ரூ. 12–0–0. 20-நாள் சாப்பிடும் 8-பலம் டப்பி விலை ரூ. 6–8-0. 12-நாள் பரீக்ஷை செய்ய 5-பலம் டப்பி விலை ரூ. 3–8–0. 8-நாள் 16-வேளை 2-பலம டப்பி 1-க்கு ரூ. 1—4—0. 4-நாள் 8-வேளை 1-பலம் டப்பி 1-க்கு ரூ. 0—12—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

☞ பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், பேரு முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரயமும் தபால் சார்ஜ் ரூ. 2—0—0யும் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷியூரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதுங் கடிதங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா. விலாசம் தெளிவாய் எழுதவும்.

☞ எமது விலாசம் :—

எம். சுல்தான் அப்துல் காதிர்
சுல்தானியா வைத்தியசாலை,
ங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா, இந்தியா.

☞ சிலோனுக்கு ஸோல் ஏஜண்டு :—

☞ **S. E. காதர் முகையதீன்,**
நெ. 39 கிழக்கு கடை

சி. சோமு பிள்ளை,

இரும்பு வியாபாரம்,

மயிலஞ்சந்தை, திருச்சிறுப்பள்ளி.

எங்களிடம் கைதேர்ந்த வேலைக்காரர்களைக் கோண்டு தயார் செய்த உயர்ந்த பூட்டு தினுசுகளும், பம்பு (pipe) குழாய் பிட்டிங் சாமான்கள் பூராவும் குளவு நாகத்தகடுகளும், உயர்ந்த மார்க்கு சிமிட்டு மூட்டைகளாகவும், பீப்பாய் களாகவும், கட்டிடங்களுக்கு உபயோகப்படும்படியான கர்டர்களும், சகலவித மான வர்ணம், வார்னீஷ் தினுசுகளும் வெகு சரசமாயும் நயமாயும் கிடைக்கும்.

சகலவித ஸ்டேஷனரி சாமான்களும் தெப்பகுளம் சமீபத்திலிருக்கும் எமது ஷாப்பு கடையில் நயமாய் கிடைக்கும்.

T. R. ரெங்கசாமிநாயுடு

வர்ணம் & கண்ணாடி வியாபாரம்,

341, 42, பெரியகடைவீதி, திருச்சிறுப்பள்ளி.

எம்மிடம் பிரசித்திபெற்ற கம்பெனிகளின் நேர்த்தியான வார்னீஷ், வர்ணங்கள், முகம் பார்க்கும் நிலைக்கண்ணாடிகள், ஜன்னல் கண்ணாடிகள், கலர் கண்ணாடிகள்.

ராஜா ரவிவர்மாவின் அழகிய சித்திரப்படங்கள், ஜெர்மன் & இங்கிலீஷ் லேடி & சீனரி படங்கள், போஸ்டு கார்டு படங்கள், படங்களுக்கு வேண்டிய சட்டம் கண்ணாடிகள் கால் அங்குல வெளிச்ச கண்ணாடிகள் அட்டை, டின் பிளேட் வகைகள்.

திருவிழாக்களுக்கு வேண்டிய கலர் காகிதங்கள், வர்த்தி தகடுகள், கண்ணாடி மணி தினுசுகள், அசல் தங்கம் & வெள்ளி ரேக்குகள் முதலியவைகள் விலை சரசமாயும் நயமானதாயும் கிடைக்கும்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

N. B. வெளியூர் ஆர்டர்களுடன் அட்வான்ஸ் முன் பணம் அனுப்புதல் வேண்டும்.

சிறுமணித்திரள்.

புகையிலை :—

இந்தியாவில் புகையிலை அனேகமாக எல்லா பாகங்களிலும் விளைகிறது. ஆனால் சென்னை, பம்பாய், வங்காளம், பர்மா, பீகார், ஒரிஸா மாகாணங்களில் மட்டும் மற்றஇடங்களில் விளைகிறதைக் காட்டிலும் 100-க்கு 75 வீதம் விளைகிறது. சென்னை மாகாணத்தில் மட்டும் குண்டூர் ஜில்லாவில்தான் அதிகமாக பயிரிடப்படுகிறது. இந்த இடத்திலிருக்கும் மண் எப்பொழுதும் ஈரப்பசையுடனிருக்கிறது. இவ்வூரில் புகையிலையை கோடை சாகுபடியாக பயிரிடுகிறார்கள். பம்பாய் மாகாணத்தில் கெயிரா, பெல்காம் ஜில்லாக்களில் அதிகமாக பயிரிடப்படுகிறது. கெயிராவில் மணல்பிரதேசங்களிலும், கொஞ்சம் களிமண் கலந்த பிரதேசஙகளிலும், பெல்காம் ஜில்லாவில் கிருஷ்ண நதியின் பக்கங்களில் கருப்பும், கருப்பும் சிகப்பும் கலந்த நிலங்களில் பயிரிடப்படுகின்றன. வங்காள மாகாணத்தில் ரங்கபூர் ஜில்லாவில் டிஸ்டா நதிக்கரையில் மணல் கலந்த உயர்ந்த பாங்கான நிலத்தில் அதிகமாக பயிரிடப்படுகின்றன. நிலங்களில் தற்காலீகமாகவெட்டப்பட்ட கிணறுகளிலிருந்து இறைத்து பயிர் செய்யப்படுகின்றன. பர்மாவில் ஐராவதம் முதலான நதிகளில் ஜலம் பிரவாகத்தினால் சில மாதங்கள் மூழ்கிக் கிடந்து பின்னால் ஜலம் வடிந்துபோயிருக்கின்ற நிலங்களில் பயிரிடப்படுகின்றன. இந்த இடங்கள் நதிகளின் மத்தியில் தீவுகளாகவிருக்கும் அல்லதுகரைகளில் ஒதுக்கப்பட்ட நிலங்களாகவே யிருக்கும். பீஹார்மாகாணத்தில் முசர்பூர், தர்பங்கா ஜில்லாவில் கொஞ்சம் மணல் கலந்த பாகங்களில் ஏராளமாக பயிரிடப்படுகின்றன. இவ்விடத்து நிலங்கள் ஈரப்பசை உள்ளவைகளாகயிருப்பதால் வெய்யல்காலத்து பயிராக பயிரிடப்படுகின்றன.

ம்பு :—

யர்கள் இரும்பு வியாபாரத்தை, த்தார் விருத்தி செய்வதைப் த்தை யெடுத்துக்கொள்வதில்லை. நம்மவர்கள் "பழையன கழிதல்" என்ற ஆன்றோர் சொற்படி பழைய சாமான்களைகுப்பையில் எறிந்துவிடுவது சகஜமாகப் போய்விட்டன. அன்னிய நாட்டாரோ பழைய சாமான்களை புதுப்பித்து விற்றுவிடுகின்றார்கள். உதாரணமாக இந்தியாவிலிருந்து பழைய இரும்புகள் ஜப்பான் தேசத்துக்கு கீழ்கண்ட விதமாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. 1926-27—29141டன், 1927-28—41869, 1928-29—60306, 1929-30—64,969, 1930-31—50,354, 1931-32—83,830 டன். ஒவ்வொரு வருடமும் அதிகமாக சென்றுகொண்டிருப்பதை கவனித்தால் இந்தியர்களுக்கு அப்பொழுதாவது அதனுடைய நோக்க மென்ன, ஏன் வருடா வருடம் அதிகமாக வாங்குகின்றார்கள். நாம் ஏன் அவைகளை விற்கிறோம் என்று கவலைப்படுமா வென்று கேள்வியை கேழ்க்கிறோம். ஜப்பான் தேசத்தார் சொற்ப விலைக்குவாங்கி, கப்பல்சார்ஜ்கட்டி எடுத்துக்கொண்டுபோய் அவைகளை உருக்கி மீண்டும் புதிய சாமான்களாக செய்து, கப்பலில்ஏற்றி, கடற்சுங்கவரி முதலானவைகளை செலுத்தியும் அதிக லாபத்தில் இந்தியாவிலேயே விற்கின்றார்கள். ஆகையினால் இந்தியர்கள் இனியாகிலும் கண்விழித்து பழைய இரும்புகளை ஜப்பான் தேசத்துக்கு அனுப்பாமல் இந்தியாவிலேயே உருக்கி விவசாய கருவிகளும் இன்னும் மற்ற சாமான்களும் செய்து சொற்பவிலைக்கு விற்கலாம். சிறிய முதலுடைய வர்த்தகர்கள் இதை கவனிக்கவும்.

அரிசி:—

உலகத்திலேயே 1931-32ல், சைனாவையும் அமெரிக்காவையும் நீக்கி, 5 கோடி 85 லட்சம் டன் அரிசி சாகுபடி. எல்லா தேசங்களையும் சேர்த்து வருட மொன்றுக்கு சராசரி 9 கோடி டன் அரிசி சாகுபடியாகிறதாம். அதில் இந்தியா மட்டும் 3 கோடி. பார்மோசாவும் ஜப்பானும் சேர்ந்து 80 லட்சம் டன். ஈஸ்ட் இண்டீஸ், எப். எம். எஸ். 75 லட்சம் டன், இண்டோசைனா 35 லட்சம் டன், பர்மா 32½ லட்சம் டன், சயாம் 20 லட்சம் டன், கொரியா 7½ லட்சம் டன், பாக்கி சைனா இன்னும் மற்ற இடங்கள். 1931-32ல் வங்காளத்தில் 9,498 000 டன், பீகார் ஒரிஸ்ஸாவில் 5,739,000 டன், சென்னை 5,260,000, பர்மா 4,182,000, மத்திய மாகாணம், பீரார் 2,257,000, ஐக்யமாகாணம் 2,038,000, பம்பாய் 1,612,000, அஸ்ஸாம் 1,542,000, ஹைதராபாத் சமஸ்தானம் 308,000, மைசூர் 218,000, பரோடா, கூர்ஜரம் 116,000, மொத்தம் 32,770,000. இதில் இன்னும் சிறிய சமஸ்தானங்களும் மற்ற இடங்களும் சேர்க்கவில்லை. இந்தியாவில் சுமார் 600 ரைஸ்மில்களிருக்கின்றன. பர்மாவில் 300, தென்னிந்தியாவில் 100, கிழக்கு மாகாணங்களில் 100. மேலே சொன்ன சமஸ்தானங்களிலும் மற்ற இடங்களிலும் சேர்த்து 100. மேல் நாடுகளுக்கு சுமார் 64 லட்சம்டன் செல்லுகின்றன. அவைகளில் பர்மாவிலிருந்துமட்டும் 20 லட்சம் டன், இந்தியாவிலிருந்து 5 லட்சம் டன், இங்கிலாந்துக்கு வருடமொன்றுக்கு குறைந்தது 45 ஆயிரம் டன் அரிசி ஏற்றுமதியாகிறது. அதில் 12 ஆயிரம் டன்வரையில் பர்மாவிலிருந்தும் பாட்னாவிலிருந்தும் செல்கின்றன. ஒட்டவா ஒப்பந்தம் காரணமாக, அன்னிய அரிசிக்கு ஒரு பவுண்டுக்கு ஒருபென்சு வரிவிதிக்கப்படுவதை முன்னிட்டு, அதிகமாக அரிசி இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாகுமென்று எதிர்பார்த்து லண்டனில் தேம்ஸ் நதிக்கரையில் ஒரு பெரிய புது ரைஸ்மில் நிர்மாணிக்கபபட்டுவருகிறது.

சிலோனில் ஏஜண்டுகள் தேவை.

"வர்த்தக ஊழியன்" பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும், விற்கவும், விளம்பரங்கள் சேகரிக்கவும் செல்வாக்குள்ளஏஜண்டுகள் சிலோனில் தேவை. விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர் "வர்த்தக

வர்த்தக ஊழியன்

திருச்சினாப்பள்ளி
1933-வது மார்ச்சு-மீ

இரும்பு வியாபாரம்.

(Iron Trade.)

இந்தியாவில், இரும்பு வியாபாரத்தில், மகாயுத்தம் நடைபெற்ற காலத்தில், ஏராளமான லாபம் வர்த்தகர்களுக்கு கிடைத்ததின் மேல் பலர் இரும்பு வியாபாரம் செய்ய ஆரம்பித்தார்கள். ஆனால் இப்பொழுது இரும்பை, ஏராளமாக வாங்கின பெரிய வர்த்தகர்கள், அதிகமாக வியாபாரமில்லாமல் வாங்காமலிருப்பதினால், இரும்பு வர்த்தகத்தில் கொஞ்சம் சுணக்கமேற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாகாணங்களிலும் இருக்கிற இரும்புவியாபாரத்தை கணக்கிட்டு பார்த்தால், இரும்பு சாமான்களை, விருத்திசெய்ய சாதகம் ஏற்படாதென்று தெரிகிறது. பொருளாதார நெருக்கடியின் காரணமாக வர்த்தகர்களுக்குள் போட்டி ஏற்பட்டு, விலைகளை குறைத்து கொண்டதினால், வர்த்தகமந்தமும் அதிகரித்து விட்டன. கவர்னமெண்டாரும், ரயில்வே கம்பெனியாரும், இருமபு சாமான்களை ஏராளமாக வாங்கிக்கொண்டிருநதார்கள். இவர்கள் இறக்குமதியான குறிப்பிட்ட சாமான்களை அதிகமாக வாங்கினதினால், இரும்பு வியாபாரம்பிரபலமாகயிருந்தது. இதனோடு டாட்டா கம்பெனியாரும் இரும்பு வியாபாரத்தில் உதவி செய்தார்கள்.

டாட்டா கம்பெனி இரும்பு சாமான்களைத்தவிர ஆங்கலேயர்களிடமிருந்தும், மற்ற மேல்நாட்டு உற்பத்திக்காரர்களிட மிருந்தும், முனிசிபாலிட்டி ஜில்லா போர்டுகளுடைய உபயோகத்துக்கும், [illegible]ன்னும் [illegible]ற உபயோகத்துக்கும் [illegible]விக்கப்பட்டு வந்தது. [illegible]த்தில் மட்டும் விவசாயிகள் தங்களுடைய வீடுகளை மூடிக்கொள்வதற்காக, இரும்புத்தகடுகளை ஏராளமாக வாங்கினார்கள். இதனால் அங்கு வர்த்தகர்கள், நெருக்கடியான நிலைமைஏற்படுவதற்குமுன், ஏராளமானசரக்குகளை, மேல் நாடுகளிலிருந்து தருவித்தார்கள். பொதுஸ்தாபனங்கள் முன்போல் வாங்குவதில்லை. அவர்களுக்கு வேண்டிய சாமான்களை முன்னைவிட அதிகம் குறைத்துக் கொண்டார்கள். கவர்ன்மெண்டாரும், ரயில்வே கம்பெனியாரும், இப்பொழுது வாங்கும் இரும்பு சாமான்களையெல்லாம் இங்கிலாந்திலிருந்து நேரே தருவித்துக் கொள்கிறார்கள். இதனால் முன் தருவிக்கப்பட்டு, ஏராளமாக தேங்கிக் கிடக்கும், இரும்பு சாமான்கள் அதிகமாக விற்பனையாகிறதில்லை. சில வர்த்தகர்கள்மட்டும், குறிப்பிட்ட சரக்குகளை தருவித்து விற்கின்றார்கள். ஆகையினால்மற்றவர்த்தகர்கள் இன்னது செய்வதென்று தெரியாமல்தவிக்கின்றார்கள். மற்ற மாகாணங்களிலுள்ள வர்த்தகர்கள் அவர்களுக்குள் ஒற்றுமையில்லாமலும், நெருக்கடியான காலத்தின் காரணமாகவும், போட்டி போட்டு வருவதினால் அதிக கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவருகின்றன, சில வர்த்தகர்கள் தங்கள் தங்களுடைய சாமான்கள் விலையாக வேண்டுமென்ற ஒரே எண்ணத்தினால், வியாபார ஒழுங்குமுறை, நேர்மையானவழி, நாணயம், இவைகளையெல்லாம் விட்டுவிட்டு சிநேகித வர்த்தகர்களுடைய வியாபாரத்தை அபகரிக்க முயற்சி செய்கின்றார்கள். போட்டியின் காரணமாக கெட்ட சாமான்களை நல்ல சமான்கள் என்று சொல்வதும், விலைகளை குறைத்து கொடுப்பதும். இன்னும் முதலானவைகள் வியாபாரத்தில் இப்பொழுது அதிமாகப் போய் விட்டபடியினால், வியாபாரத்தில் இன்னும்பல கஷ்டங்கள் நேரிட்டதோடும், வியாபாரம் செய்ய வருபவர்களுக்கும், வர்த்தகர்களிடம்நம்பிக்கைகுறைவும் ஏற்படுகிறது.

இறக்குமதி செய்யப்படும் சாமானகளுக்கு, அதிகவரிவிதிக்கப்[illegible]டுவதினால், விலைகளும் உயரவே, ஜம்ஷட்பூரிலிருக்கும் டாட்டா கம்பெனி சாமான்களுக்கு கிராக்கி ஏற்பட்டது. இந்திய சாமான்கள் வாங்க வேண்டுமென்ற எண்ணம் ஜனங்களுக்கு உதித்திருக்கும் இச்சமயத்தில், டாட்டா கம்பெனியார் தங்களுடைய சரக்குகளை, வர்த்தகர்களுக்கு தகுந்த விலைக்கு கொடுத்து, அபிவிருத்தி செய்து கொள்வதற்கு இதுவே ஏற்ற தருணம். ஆனால் டாட்டா கம்பெனியில் தயாரிக்கப்படும் சாமான்களை மட்டும்தான் வியாபாரம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்துவது கூடாது. சில வாத்தகர்களிடம், ஏராளமான அன்னியநாட்டுசாமான்கள் இன்னும் இருந்து வருகிறபடியினால், அவர்கள் மேற்கொண்ட ஒப்பந்தத்துக்கு ஒப்புக்கொள்ளமாட்டார்கள். மேலும் வர்த்தகர்களை இந்திய சாமான்களுடன் அன்னியநாட்டு சாமான்களையும்; சேர்த்து வியாபாரம் செய்யக்கூடாதென்று நிர்ப்பந்தம் செய்வார்களேயானால் அவர்கள் மலிவாகக்கிடைக்கும் ஜப்பான் முதலான தேசத்து சாமான்களை வரவழைத்து விற்க பிரயத்தனப் படுவார்கள். வழக்கமாக வியாபாரம் செய்யும் ஒருவர் ஷெவர்த்தகரிடம்சென்று, தனக்கு இந்திய இரும்பு சாமான்கள் வேண்டுமென்று கேட்டால், அவர் தம்மிடமில்லை யென்று சொல்ல நேரிடும். அதனால் இந்திய சாமான்களுக்கு பதிலாக அன்னிய சாமான்களை வாங்க நேரிடும். இல்லாவிட்டால் இந்திய சாமான்கள் கொடுக்க முடியாதபடியினால் வழக்கமாக வாங்குபவரை மேற்படி வர்த்தகர் இழக்க நேரிடும்.

ஆகையினால் இந்திய சாமான்கள் உற்பத்தி செய்பவர்கள், வர்த்தகர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, அவர்களுக்கு உதவி செய்து, வியாபாரம் விருத்தியடைய ஒத்துழைத்து, இந்திய சாமான்கள் அதிகப்படியாக வியாபாரம் செய்யவும், வர்த்தகர்களுக்கும் யாதொரு இடையூறுமில்லாமல் வியாபாரத்தை நடத்திக் கொண்டு போகவும், ஏற்ப[illegible] செய்தால் நன்மையாக யி[illegible] மென்று தெரிவித்துக் கொ[illegible]கிறோம்.

ராஜம்—சமூகசீர்திருத்தக் கதை.

(Social Reform Novel.)

(எம். எஸ். ஆர். சந்திரன் எழுதியது.)

அத்தியாயம் 7.]

[பிப்ரவரி மாதத் தொடர்ச்சி.

"இன்றைக்கு நாள் நல்லநாள்தானே"? என்றான் முத்து.

"நாளாவது கிளாவது, டாம் நான் சன்ஸ். எண்டா, உன் தங்கையை அழைத்து வந்தேனே நாள் பார்த்துத் தான் அந்த நள்ளிரவில் சைகிளில் அழைத்து வந்தேனோ" என்றான் மணி.

"மனோ ஜயந்தி மாண்டவ்ய" என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர். அவசர வேளையில், நாள் பார்ப்பதென்றால் மனங்கலங்கிப் போகும். மனோதிடமே முக்கியம். உங்கள் மனம் என்னை அழைத்துப் போவதெனத் தீர்மானித்ததும் என் மனமும் தங்களுடன் தொடர்வதெனத் தீர்மானித்ததும் மனோவெற்றியுண்டாகியது" என்றாள் ராஜம்.

"நீங்களிருவரும் விவாகம் செய்து கொள்ளவில்லையே" என்றான் முத்து.

"விவாகம் நடத்துவதென்றால் ஆயிரம் பதினாயிரம் வேண்டும். உன் தகப்பனார் ஏற்கனவே ஏராளமான பணத்தைச் செலவிட்டு என் தங்கைக்கு விவாகம் செய்து விட்டார். அடே முத்து, என் தங்கைமீது உன் தந்தைக்கு மிகுந்த கோபம் பிறந்திருக்குமோ? ஏனென்றால் ராஜம்போல் நடித்திருக்கிறாளே. மேலும் விவாகம் முடியும் வரை ஒருவரிடத்தும் ஒரு விஷயத்தையும் சொன்னவளில்லை யென்று தெரிகிறது. ராஜம்! அவள்தான் உனது உண்மையான தோழி. உனது மனோபீஷ்டத்தை நிறைவேற்ற எவ்வளவு தைரியத்துடன் நடந்து கொண்டிருக்கிறாள் பார்த்தாயா?" என்றான் மணி.

"அவள் அப்படி நடந்து கொள்ளாவிட்டால் நான் உங்களை மணப்பதெப்[illegible]." என்றாள் ராஜம்.

[illegible]த்து! அதிக கோபம் கொண்டு [illegible]ம் ஸ்வர்ணத்தை வீட்டை விட்டு [illegible]ட்டால் அவள் கதி என்னாவது. மேலும் எனக்கொரு சந்தேகம் ஜனிக்கின்றது, சம்மந்தி வீட்டில் ராஜம் என்று சொல்லி ஸ்வர்ணத்தை, பிரகசரண வகுப்புப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்து நாம் ஏமாற்றி விட்டோம் என்று அவர்களுக்குத் தெரியவந்தால், ஸ்வர்ணத்தை விலக்கி வைத்து விட்டால் பிறகு அவள் நிலைமை என்ன- நாம் இதையெல்லாம் யோசியாமல் காரியத்தைச் செய்து விட்டோமே" என்றான் மணி.

"அடே இதற்கெல்லாம் சற்றும் யோசியாதே. அப்படி அவளைத் தள்ளி வைத்து விட்டால் நானே அவளை மணந்து கொள்ளுவேன். இது சத்தியம்".

"ஏன், அண்ணா இதை முன்னதாகவே யோசித்து நீரே ஸ்வர்ணத்தை மணந்து கொண்டிருப்பின் ஒரே பந்தலில் எனக்கும், ஸ்வர்ணத்துக்கும் விவாகம் நடந்திருக்குமே. இத்தகைய சங்கடங்களும் ஏற்பட்டிராதல்லவா?" என்றாள் ராஜம்.

"எனக்கும் அந்த எண்ணம் உண்டு. ஆனால் அதில் ஒரு ரகசியம் உண்டு. அது மணிக்குத் தெரியும். நான் ஏற்கனவே எனது மற்றோர் நண்பன் கணபதியின் தங்கை கமலத்தை மணந்து கொள்ளுவதென்று தீர்மானித்து விட்டேன். கணபதியோ அஷ்டசஹஸ்ர வகுப்பைச் சேர்ந்தவன். நான் வடமன். நம்முடைய கொள்கை பூர்த்தியாக இப்பொழுது உன் விஷயத்தில் நடத்தியபடி நானும் செய்ய வேண்டியதுதானே. அதற்காகத்தான் இந்தப்படிச் செய்ய நேர்ந்தது. இல்லாவிட்டால் நான் இலகுவில் விட்டுவிடுவேனா. நம் சம்மந்தியோ அன்றி நம் தகப்பனாரோ ஸ்வர்ணத்தைத் தள்ளிவைத்த பிறகல்லவா அதைப்பற்றி யோசிக்க வேண்டும்" என்றான் முத்து.

இப்படி இவர்கள் மூவரும் திருச்சி ஆண்டாள் வீதியின் மத்தியில் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள ஒரு வீட்டு மாடியில் ரத்ன கம்பளம் விரிக்கப்பட்ட தரை மீது உட்கார்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது காலை சுமார் $8\frac{1}{2}$ மணியிருக்கும். திடீரென "ஸார் ஸார்" என்ற குரலோசையும், வீட்டு வெளிக்கதவைத் தட்டும் சத்தமும் கேட்டன. மணி கீழே சென்று கதவைத்திறக்கவும் தபால்காரன் ஒரு நீண்ட கவரைக் கொண்டு வந்து நீட்டினான். அதை மணி வாங்கிக் கொண்டு கதவைத் தாழ்ப்பாளிடாமல் சாத்திவிட்டு மாடிக்குவந்து கவரை முத்துவிடம் கொடுத்தான். உடனே "எனக்கா இந்தக்கவர்" என்றான் முத்து. "இல்லை." என் விலாசத்துக்குத்தான் வந்திருக்கிறது. "நீதான் பிரித்துப் பார்த்து என்னிடம் கொடு" என்றான் மணி. என்ன, கவர்மீது "ஆன் ஸ்டேட் சர்விஸ்" என்று எழுதியிருக்கிறதே, என்று சொல்லிக்கொண்டு கவரைப் பிரித்து அதனுள் இருக்கும் கடிதத்தைப் படித்து முடித்ததும் முத்து முகத்தில் உத்ஸாகக்குறிகள் காணப்பட்டன. "என்ன கடிதம் அண்ணா, அது" என்று மிகுந்த ஆவலுடன் வினவினாள் ராஜம். "மணி, எனது மனமார்ந்த சந்தோஷத்துடன் உன்னைப் பாராட்டுகிறேன். இதைப்பார்" என்று கடிதத்தை மணியிடம் முத்து கொடுத்தான். மணி அதைப்பார்த்துவிட்டு ராஜத்திடம் கொடுத்தான். அதைப்படித்ததுமே ராஜத்துக்குத்தான் அளவிலா ஆனந்தம் உண்டாகியது.

"எல்லாம் உன் தங்கை மகிமைதான்" என்றான் மணி.

"லட்சுமி வந்தாள், உத்யோகமும் கையுடன் வந்தது" என்றான் முத்து.

"எனக்குத்தான் இருக்கட்டுமே அந்த பெருமை" என்றாள் ராஜம்.

"ரூ 250—25—10[illegible] [illegible]யமனமானாலும் என்[illegible]

டில் உன் ஆபீசர் சந்தோஷப்பட்டு பின்னும் சம்பளத்தை உயர்த்தக்கூடாதா பார்த்துக்கொள்ளுவோம். மேலும் இதில் ஒரு விசேஷ மிருக்கிறது. ஹைதராபாத் சமஸ்தானத்துக்கு உதவியாக இருக்கும் பிரிடிஷ் ரெஸிடெண்டு ஆபீஸில் ஆபீஸ் சூபரின்டெண்டு என்றால் அதற்கு கௌரவம் நிரம்ப உண்டு. மேன்மை தங்கிய நைஸாம் அவர்களும் உனக்கு ஆதரவு காட்டுவார்" என்றான் முத்து.

"உடனே தாமதியாமல் உத்தியோகத்தில் சேரவேண்டியது" என்று கண்டிப்பாக ரெஸிடெண்டு எழுதியிருக்கிறாரே. என்றைக்குப் பயணம் போகவேண்டும்." என்றாள் ராஜம்.

"நாளை இரவு பயணம் புறப்படவேண்டியதுதான்" என்றான் மணி. "அப்படியானால் நான்———ன் என்ன செய்யட்டும். தங்களுடன் வரக்கூடாதா" என்று சொல்லிக்கொண்டே தன் மனவருத்தத்தைக்காட்ட வாரம்பித்தாள்.

"நீயும் மணியுடன் செல்ல உனக்கு இஷ்டந்தானா?" என்றான் முத்து.

"அண்ணா, நானும் அவருடன் போகத்தான் வேண்டும். என்னை அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யுங்கள்."

"மணி, நீ ராஜத்தையும் அழைத்துச் செல்ல முடியுமா. அவளோ உன்னுடன் வரவேண்டுமென்கிறாள். அல்லது நீ அங்குபோய் நல்ல வசதிகளுள்ள வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு பிறகு வந்து அவளை அழைத்துப்போகிறாயா? என்று மணியை முத்து கேட்டான்.

"நானும் போகத்தான் வேண்டும். கலியாணம் ஆகாமல் என்னை அழைத்து வந்துவிட்டு, இங்கேயே என்னை விட்டுச் சென்றால் நான் இங்கே தனியாகவசிக்க முடியாது. அன்றி நான் ஊருக்குச் சென்றாலும் தகப்பனார் என்னுடன் பேசப் போவதில்லை. அத்துடன் மட்டுமா, நான் நம் வீட்டில் இருப்பதிலும் தகப்பனாருக்குத் திருப்தியிருக்காது. நான் திரும்ப போனால் குட்டு வெளிப்பட்டுப்போகும். சம்மந்திக்கு சமாசாரம் எட்டிப்போகும். ஊரும் கல்லென்று சிரிக்கும். இதற்கெல்லாம் இடந்தராமல் இருக்கவேண்டுமானால் நானும் அவருடன் செகந்தராபாத்துக்கு அவசியம் போகவேண்டியதுதான்."

... என், ... உன் யோசனை என்ன? ...னை யென்று ஒன்று ... சொல்லுகிறாயோ

அப்படிச் செய்யக் காத்திருக்கிறேன்" என்றான் மணி.

"மணியைத் தன் கடைக்கண்ணால் ராஜம் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டதும், மணி அவளது உள்ளத்தை அறிந்தவனாய் உடனே "ராஜம் என்னுடன் வரட்டும் முத்து, நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்றான் மணி. உடனே ரூ. 500 கொண்டுபோவதென்றும், குடும்பத்துக்குத் தேவையான சாமான்களை அங்கேயே வாங்கிக் கொள்ளுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. சில நிமிஷங்கள் உரையாடிய பிறகு இன்று முதல் ஏழாவது நாளில் வேலையில் சேர்ந்து விடுவதாகக் கடிதம் அனுப்புவதென முடிவு செய்யப்பட்டது. இப்படி பேசிக்கொண்டிருக்கும் சமயம் யாரோ வரும் காலடி சத்தம் கேட்டது. வெளிக்கதவைதாழ்ப்பாளிடவில்லையோ' என்று மணியை முத்து கேட்டான். ஆம் மறந்து விட்டேன்" என்று பதில் சொல்லிக்கொண் டிருக்கும்போதே, கல்யாண ரிஜிஸ்திரார் மிஸ்டர் வெங்கோபராவ் நீண்ட சட்டை தரித்துக்கொண்டு தலைப்பாகையுடனும், தன்குமாஸ்தா பின் தொடர்ந்துவர உள் நுழைந்தார். உடனே முத்து எழுந்து வந்தனங்கூறி அவருக்கு ஆஸனமளித்தான். அவர் குமாஸ்தா ரிஜிஸ்திரார் பக்கம் நின்று கொண்டிருந்தான். ராஜம் எழுந்து ஒரு மூலையில் தலை குனிந்து நின்றாள். மணியை முத்து ரிஜிஸ்திராருக்கு அறிமுகம் செய்வித்தான்.

" சார், விவாகத்தை ரிஜிஸ்தர் செய்ய வேண்டியதுதானே. அதற்கு என்ன செய்யவேண்டியது" என்று முத்து கேட்டான்.

"தக்க சாட்சிகள் இருவர் வேண்டும். யாரையாவது அழைத்து வாருங்கள்" என்றார் ரிஜிஸ்திரார்.

"என்னை ஒரு சாட்சியாகக் கொள்ளலாமே" என்றான் முத்து.

"நீர் பள்ளிக்கூடத்து மாணவன் அல்லவா? என்றார் ரிஜிஸ்திரார்.

"இல்லை, படிப்பு முடிந்துவிட்டது" என்றான் முத்து.

"சரி வேறு யாராவது ஒருவரை அழைத்துவாரும்" என்றார்.

உடனே முத்து வெளியில் சென்று சில நிமிஷத்துக்கெல்லாம் பிரக்யாதி பெற்ற சாமா வாத்தியாரை அழைத்து வந்தான். உள்ளே வரும்போது எதற்காக தன்னை அழைத்து வருகிறான் என்பதை அவர் கேட்கவில்லை. பெரிய இடத்துப்பையன் அழைக்கிறானே என்ற எண்ணத்துடன்மட்டும் யாதொரு தடையும் சொல்லாமல் பின்தொடர்ந்து வந்தார். உள்நுழைந்ததும் கதவைத் தாழ்ப்பாளிட்டு மாடியில் ஏறும்போது மாடிபடிகட்டின் மத்தியில் நிறுத்திக் கொண்டு "ஓய், வாத்தியாரே, நான் இன்னாரென்று உமக்குத் தெரியுமா? என்றான் முத்து.

"எனக்குத் தெரியாதா, ரெங்கனாதபுரத்து அந்த ஸ்ரீநிவாசய்யர் குமாரரல்லவா, தாங்கள்" என்றார் சாமா.

"மாடியில் எனது தங்கை ராஜத்துக்கும், எனது நண்பர் மணிக்கும் ஸிவில் விவாகம் ரிஜிஸ்டர் செய்ய உம்மை ஒரு சாட்சியாகக் கோருகிறேன். நீங்கள் கையொப்பம் போடமுடியுமா?"

ஸிவில் விவாகமா, அதென்ன எழவு. அதெல்லாம் வேண்டாம் அய்யா, கதவைத் திறவும், நான் வெளியில் போகிறேன்."

"ஓய், ரூபாய் ஐந்து தட்சணை ஒரு சாட்சிக்கு" என்று சொல்லி ஒரு ஐந்து ரூபாய் நோட்டைக் காண்பித்தார். சாமா வாத்தியாருக்கு சிறிது முக மலர்ச்சி யேற்பட்டது. "முத்து, உன் தங்கைக்குத்தான் உன் தகப்பனார் 4000, 5000 செலவிட்டு சமீபத்தில் விவாகம் நடத்தினாரே. இப்பொழுதென்ன இது இரண்டாவது விவாகமா. ஒரு சமயம் உனக்கு இன்னொரு தங்கையும் உண்டோ" என்றார் சாமா.

"அதெல்லாம் உமக்கு என்ன விசாரம் நீர் கையெழுத்துப் போடும். இந்த ரூ. 5 ஐ வாங்கிச்செல்லும்" என்றான்முத்து.

கையெழுத்துப் போடுவதில் சம்மதந்தான். ஒரு சமயம் கும்பகோணம் கதையாக முடிந்தால் என்ன செய்வதென்ற பயந்தான் எனக்கு என்றார் சாமா.

இது உண்மையான விவாகம். நீர் சந்தேகிக்கவேண்டியதில்லைவாரும்உள்ளே. ரிஜிஸ்திரார் வந்திருக்கிறார். இந்தப் பெண்ணை உமக்குத் தெரியுமா என்றால் நீர் தெரியும் என்று சொல்லும்" என்றான் முத்து.

"அடே முத்து. ரிஜிஸ்திரார் பெரிய உத்தியோகஸ்தரோ" என்றார் சாமா. ஆம் என்று முத்து சொல்ல இருவரும் மாடிக்குச் சென்றனர். ரிஜிஸ்திராரை சாமா வாத்தியார் கண்டதும் இடுப்பில் தன் மேல் அங்கவஸ்திரத்தைக் கட்டிக் கொண்டு மரியாதையாக நின்றார். சாமா வாத்தியாரைப் பார்த்த ரிஜிஸ்தி... அவரை உட்காரும்படி சொன்னார்... துவைப் பார்த்து விவாகம் ஆ...

படலாமா எ... திரார்கேட்டார். உடனே "நல்ல... ளை சுபயோகம் லக்னம் கடகம், லக... திபதி பதினொன் றில் உச்சம், கடகராசியில் குரு உச்சம், துலாத்தில் சனி உச்சம் எல்லாம் நன்றா யிருக்கிறது. மணக்கோலத்துடன் பெண்ணும் மாப்பிள்ளையும் வரட்டுமே" என்றார் சாமாவாத்தியார்.

ஓய் வாத்தியாரே, இங்கே மந்திரம் ஒன்றுமில்லை. எல்லாம் தந்திரந்தான். பேனா காகிதத்தில் விவாகம். நீர் மந்திரம் சொல்லுவதற்குப் பதிலாக ஒரு சாட்சி மட்டும் போடவேண்டும்" என்றான் முத்து.

"சரி அப்படியே செய்கிறேன்" என்றார் சாமா.

ரிஜிஸ்திரார்:--(முத்துவைப்பார்த்து) மிஸ்டர், இந்தப் பெண் உமக்கு என்ன உறவு?

முத்து:—என் தங்கை.

ரிஜிஸ்:—அவள் பெயர்?

முத்து:—ராஜம்.

ரிஜிஸ்:—வயதுஎன்ன உத்தேசமாகச் சொல்லலாம்.

முத்து.—18 வயது.

ரிஜிஸ்:—கார்டியன் பெயர்.

முத்து:—நான்தான் அவளுக்குக் கார்டியன்.

ரிஜிஸ்:—தகப்பனாரில்லையோ.

முத்து:—இருக்கிறார். ஆனால் பைத்தியம் பிடித்த நிலையில் இருக்கிறார்.

ரிஜிஸ்:—மாப்பிள்ளையின் பெயர்.

முத்து:— மணி அய்யர், வயது 24, பி. ஏ. பட்டம் பெற்றவர்.

ரிஜிஸ்:—மாப்பிள்ளையின் தகப்பனார் யார்.

முத்து:—தகப்பனார் பெயர் ரெத்தினம் அய்யர், காலமாகிவிட்டார்.

ரிஜிஸ்:—மிஸ்டர் மணி அய்யர், உங்களுக்கு மிஸ்டர் முத்து அய்யரின் சகோதரி மிஸ். ராஜத்தை மணந்துகொள்ள இஷ்டந்தானே.

மணி:—ஆம் ஸார்.

ரிஜிஸ்:—மிஸ் ராஜம்மாள்! மிஸ்டர் மணி அய்யரை மணந்து அவரை உமது கணவராகக்கொள்ளபூராஇஷ்டந்தானே!

ராஜம்:—(தலை குனிந்தவண்ணமாக நின்றுகொண்டு மெல்லிய குரலில்) ...மாம்.

...ின் இருவரும் புஸ்தகத்தில் கை ...்திட்டார்கள்.

...து, இப் புஸ்தகத்தில் இந்தப் ...உமது கையெழுத்தை நாட்டும்" என்று சொன்னதும் முத்து கையெழுத்திட்டான். பிறகு சாமா வாத்தியாரைப் பார்த்து விவாக முறையை விளக்கிவிட்டு இந்த ஒப்பந்த விவாகத்தில் அவர் பிரசன்னமாயிருந்ததற்கு அடையாளமாக கையெழுத்துப் போடும்படி அவரிடம் ரிஜிஸ்திரார் சொன்னார்.

"முத்து நான் கையெழுத்து போடட்டுமா அப்பா" என்று சொல்லிக் கொண்டே முத்துவின் முகத்தைப் பார்த்தார். முத்துவும் தலையைஅசைத்து ஐந்து விரலைக் காண்பித்தான். சாமா வாத்தியாரும் கையெழுத்தை நாட்டினார். உள் பீரோவில் வைக்கப்பட்டிருந்த இரு தங்க மோதிரங்களும், சந்தனம், பூமாலைகள், பழம், கற்கண்டு கொண்டுவரப்பட்டன. இரு மோதிரங்களிலும் இருவர் பெயரின் முதல் இரு அட்சரங்கள் செதுக்கப்பட்டிருந்தன. ராஜமும் மணியும் ஒருவருக்கொருவர் மோதிரங் கொடுத்துமாற்றிக்கொண்டனர். பூமாலைகளையும் மாற்றிக்கொண்டனர். பின்னர் சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் வழங்கப்பட்டன. விவாக ரிஜிஸ்திராருக்கு ரூ. 15 சன்மானம் அளிக்கப்பட்டதும் அவர் முத்து தம்பதிகள் இவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுச் சென்றார். சாமா வாத்தியாருக்கு ரூ. 5 தட்சணையாகக் கொடுக்கப்பட்டது. பணத்தை வாங்கிக்கொண்டதும் புளகாங்கிதமாகி வாழ்த்து மந்திரங்களைச் சொல்லி மங்கள ஆசிகூறிச் சென்றார். யாவரும் சந்தோஷமாக இருதினங்கள் கழித்துவிட்டு சிகந்திராபாத்து பிரயாணத்தில் கவனமாக இருந்தனர்.

(தொடரும்)

இந்தியாவில் பொக்கிஷ நிலைமை.

		1931	1932
இம்பீரியல் பாங்கு ரேட் 100 க்கு	...	8	4
இங்கிலாந்து பாங்கு ரேட் „	...	6	2
பம்பாயில் கால்மணி (call money) 100க்கு	...	$5\frac{1}{2}$	$1\frac{1}{2}$
பம்பாய் ஜப்பான் தந்தி	... ரூ.	144	83
லண்டன் நியூயார்க்	... டாலர்	3.42	3.31
பம்பாயில் தங்கம்	... ரூ.	29-12—0	30—9—0
„ வெள்ளி	... ரூ.	62—7—0	49—2—0
100 க்கு $3\frac{1}{2}$ வட்டி பத்திரம்	... ரூ.	51-14—0	74—3—0
„ „	... பவுன்	51-0—0	88—0—0
இம்பீரியல் பாங்கு ஷேர்	... ரூ.	860—0—0	1230—0—0
பம்பாய் டையிங் ஷேர்	... „	631—4—0	660—0—0
டாட்டா இரும்பு கம்பெனி ஷேர்	... „	22—4—0	36—0—0
டாட்டா பவுர் ஷேர்	... „	411—4—0	773-12—0
இந்தியன் சிமிண்டு ஷேர்	... „	145—4—0	190—0—0
இம்பீரியல் பாங்கில் கையிருப்பு	... „	8.05கோடி	21.93கோடி
„ கடன் வகையறா	... „	60 57 „	67.80 „
கரென்சி ரேட்டுகள் செலாவணியிலிருந்து	... „	179.30 „	174.75 „

மேற்கண்ட சில முக்கிய இனங்களிலிருந்து தெரிந்துகொள்வதென்னவென்றால் 1931-ம் வருடத்தைவிட 1932-ம் வருடத்தில் பணநெருக்கடி அதிகமாகவேயிருந்திருக்கிறது.

தங்கள் வியாபாரத்திற்குள்ள டிரேட் மார்க்குகள், பெயர்கள், லேபில்கள் முதலியவைகளை மற்ற வியாபாரிகள் உபயோகித்து உங்கள் லாபத்தை அடையுமுன் நீங்கள் அவைகளை உடனே

கல்கத்தா ரிஜிஸ்டர் செய்துகொள்ளவும்.

விலாசம்;—ஆல் இந்தியா ரிஜிஸ்ட்ரேஷன் ஏஜென்ஸி,
ஹீபர் ரோட், பாலக்கரை, திருச்சினாப்பள்ளி.
முழு விபரம் இனும்.

"வர்த்தக ஊழியன்"

வர்த்தகர்களுக்காக உழைக்கும் ஒரு சிறந்த மாதப் பத்திரிகை.

உள்நாட்டிற்கு வருட சந்தா ரூ. 1-0-0
வெளி நாடுகளுக்கு „ ரூ. 1-8-0

இன்றே சந்தாதாரர்களாய் சேருங்கள்

மா...

வர்த்தக ஊழியன், ...

ஜர்மனியில் இந்திய வியாபாரம்.

ஜெர்மனி யிலுள்ள ஹாம்பர்க்கில் இந்திய வியாபாரக்கமிஷனரான திரு. எஸ். என். குப்தா சமீபத்தில் கல்கத்தாவில் கூறியதாவது:—

வங்காளத்துச் சணலை வாங்கும் தேசங்களுள் ஜெர்மனி முக்கியமானது. சென்ற 3 முறையாகப் பொருளாதாரச் சுணக்கமேற்பட்டிருப்பதால் ஜெர்மனியில் சணலுக்கும் சணல் பொருள்களுக்கும் கிராக்கி குறைந்துவிட்டது. ஜெர்மன் கவர்ன்மெண்டார் இறக்குமதியை வெகுவாகக் குறைக்கும்படி செய்துவருவதால் புதிதாகச் சணல் வியாபாரஞ் செய்வதற்கு கஷ்டமேற்படுகிறது. ஐரோப்பியா நாடுகளில் சணல் சரக்குகள் ஏராளமாகக் கையிருப்பாக இருப்பதால் ஜெர்மன் ஆலைகள் வேலை நேரத்தைக் குறைத்து விட்டன. ஜெர்மனியின் சணல் தேவையானது தற்காலச் சுணக்கமும் சர்க்காரின் நாணயமாற்று நிர்ப்பந்தமும் நீங்காதவரை அதிகரிக்காது. இந்திய மார்க்கெட்டுகளில் ஏராளமாக வந்திறங்கும் ஜப்பானியச் சரக்குகளுடன் ஜெர்மனி உற்பத்திக்காரர்கள் போட்டி போட முடியவில்லை. இதற்கு ஜெர்மனி இன்னும் தங்கமதிப்பு முறையை மேற்கொண்டிருப்பதும் ஐரோப்பிய நாடுகளில் தொழிளாலர் கூலி உற்பத்திச் செலவு முதலியன அதிகமாக இருப்பதும் காரணங்களாகும். ஜெர்மனிக்கும் பிரிட்டனுக்குமிடையிலுள்ள வியாபார ஒப்பந்தத்தில் கண்டதொரு ஷரத்துப்படி ஜெர்மனி இந்தியச்சரக்குகளுக்கு இறக்குமதி விஷயத்தில் விசேஷ சலுகை காட்டுகிறது. ஒட்டவா ஒப்பந்தத்தினல் ஜெர்மனி இந்திய சரக்குகளை முன் போல் நடத்துமா என்பது இனிதான் பார்க்கக் கிடக்கிறது.

சென்ற 2 வருஷங்களில் ஜெர்மனி இந்தியாவிடமிருந்து அதிகமான சரக்குகளை வாங்கியிருக்கின்றது. இவ்வளவுக்கு 5 முக்கியமான தேசங்கள் சேர்ந்து இந்தியாவிலிருந்து சரக்குப் பிடிக்கவில்லை. பிரிட்டனுக்கடுத்தபடியாக ஜெர்மனியே இந்தியாவிலிருந்து அதிகம் சரக்கு வாங்குகிறது. இந்தியாவிற்கு விற்பதைப்போன்று 2 மடங்கு சரக்குகளை ஜெர்மனி வாங்கிவந்தது. ஆனல் சென்ற ஒரு வருஷமாக அது இந்தியாவிடமிருந்து சொற்பச் சரக்குகளையே வாங்கி வருகின்றது. இதற்கான காரணம் இறக்குமதி வியாபாரிகள் பாதியளவுக்கு சர[illegible]வாங்க அனுமதிக்கப்பட்டிரு[illegible]யாகும். ஜெர்மன் கவர்ன்மெ[illegible]ன் விவசாயமுறைகளால் தினை, கேழ்வரகு முதலிய தான்யங்களின் இறக்குமதி குறைக்கப்பட்டிருக்கிறது. சென்ற டிசம்பர் மாதத்தில் தான் அரிசி இறக்குமதிக்கு நிர்ப்பந்த மேற்படுத்தப்பட்டது. இவ்வளவு நிர்ப்பந்தங்களிருப்பதால் இந்தியச் சரக்குகளை ஐரோப்பிய மார்க்கெட்டுகளில் விற்பது அதிகக்கஷ்டமாகி வருகிறது.

தற்சமயம் இந்திய வியாபாரிகள் தங்களது ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதியை அதிகரிக்க வழி தேடுவது கஷ்டம். வியாபாரச் சுணக்கம் தீர்ந்த பிறகு ஐரோப்பாவில் புதிய வியாபாரத்தைத் துவக்குவது சாத்தியமாக இருக்கும்.

அறிவிப்பு

வர்த்தகம், கைத்தொழில் முதலானவைகளைப்பற்றி வியாசங்கள் பத்திராதிபருக்கு எழுதியனுப்பினல் பிரசுரிக்கப்படும், நல்ல வியாசங்களுக்கு தகுந்தாப்போல் சன்மானம் கொடுக்கப்படும். வர்த்தக ஊழியன் ஒரு பக்கத்திற்குள் அடங்கும்படியாக எழுதியனுப்ப வேண்டும்.

விளம்பரமே வியாபாரத்திற்கு அடிப்படை.

உங்கள் விளம்பரம் கண்ணைக்
கவரக்கூடியதாக இருந்தால்
உங்கள் வியாபாரம்
அபிவிருத்தி யடைந்து
நல்ல லாபம் பெறுவீர்

அத்தகைய விளம்பரத்திற்கு
சாதகமாகவுள்ள உங்கள்
எந்த அச்சுவேலைகளையும்,
ஒரு சிறிய நோட்டீஸ்
முதற்கொண்டு போஸ்டர்
முதலிய யாவற்றையும்

திருச்சி பெரியகடைவீதியிலிருக்கும்
முருகவிலாஸ்
ஜனானுகூல அச்சாபீஸுக்கு
இன்றே அனுப்புங்கள்

கண்ணுக்கு அழகாயும் நேர்த்தியான நடையில் உங்கள் அச்சுவேலைகளை முடித்து தருகின்றோம்.
[illegible] சார்ஜ்! குறைந்த சார்ஜ் !!

ஒரு முறை உங்கள் அச்சுவேலைகளை நமது அச்சாபீஸுக்கு அனுப்பி உங்கள் வேலையின் நயத்தையும் வனப்பையும்
பரிசோதியுங்கள்! பரிசோதியுங்கள் !!

திரேக ஆரோக்கியத்துக் கேற்ற பழவகைகள்.

பல வெளியூர்களிலிருந்து காலக்கிரமத்துக் கேற்றவாறு குடகு ஆரஞ்சு, ஆப்பிள், வெள்ளை, கருப்பு திராக்ஷைப் பழங்களும், அசல் சிறுமலைப்பழம் முதலிய அனேகவித பழ வர்க்கங்களும், இங்கிலீஷ் காய்கரி வகையறுக்களும், மொத்தமாக தருவித்து வியாபாரிகளுக்கும் இதர பொதுஜனங்களுக்கும், மொத்தமாகவும், சில்லரையாகவும் விலைசரசமாய் விற்க தகுந்த ஏற்பாடு செய்திருக்கிறோம்.

தயவு செய்து எங்களிடம் ஒருமுறை வாங்கி பரீக்ஷித்துப் பார்க்கும்படி விநயமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

விலாசம்:—நா. குப்புசாமி நாயுடு & சன்ஸ்,
பழக் கமிஷன் மண்டி, மார்க்கெட் திருச்சி.

வெள்ளை வெட்டைக்கு ஆச்சர்யமானது

(குணமில்லை என்றால் ரூ. 100 இனாம்)

வங்க வெள்ளி பஸ்பம்

10 வருடமாகியும் தீராத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல். புண், ரத்தம் விழல், நாப் ரணம், வயிற்றுப்புண், சீழ்வெள்ளை, மஞ்சள்வெள்ளை, ஒழுக்குவெள்ளை, மூலக்கடுப்பு, ஆசனக்கடுப்பு, வயிற்றுவலி, தந்திமேகம், சதை அடைப்பு, கல்லடைப்பு, ஈஎறும்பு மொய்த்தல், நீர்சுருக்கு, இந்திரிய ஸ்கலிதம், நீற்றுப்போதல் முதலிய சகல வெள்ளை வெட்டையும் கண்டிப்பாய் குணமாகும். இது இந்த வியாதிக்கே ராஜன்.

இதற்கு மேலான மருந்தே இல்லை 1 புட்டி ரூ. 15. ½ புட்டி ரூ. 8.

குறிப்பு : அன்னிய நாட்டினர் தபால் செலவு ரூ. 2 சேர்த்து முன் பணம் அனுப்பவும்.

விலாசம் :— கே. எஸ். பதி, வைத்தியசாலை, பழனி S. I. Ry

தி எக்கணாமிக் இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: திருவல்லா.

Marriage, Birth, Death and Insurance.

(மணம், ஜனனம், & மரணம்)

பிரவேசக்கட்டணம் ஒவ்வோர் கிளைக்கும்

ரூபா இரண்டு (2) மட்டும்

No monthly call when there is no Death.

மரணம் இல்லாத காலங்களில் பணம் கட்டவேண்டிய அவசியமில்லை.

மற்றும் விபரங்களுக்கும் புது வருஷத்திய (1933) காலண்டருக்கும் (Calendar for 1933) 0—1—3 ஸ்டாம்பு அனுப்பி எழுதவும்.

(K. V. K. & Co.,) கே. வி. கே. & கோ.

சீப் ஏஜண்டுகள, திருக்கோவலூர் S. A. Dt.

மதிப்புரை.
(Reviews.)

காலண்டர்கள்:-

சோல்டன் & கோ, சென்னை,
ஸ்ரீ நிலையம் பிரஸ், திருச்சி,
கே. வி. கே. & கோ, கீழையூர். (திருக்கோவலூர்)
முதலியவர்களிடமிருந்து 1933-ம் வருடத்திய காலண்டர்கள் வரப்பெற்ரோம். வெகு நன்றாக அச்சிடப்பட்டிருக்கிறது.

பத்திரிகைகள் :—

ஞான தீபம்	பிப்ரவரி மீ
குலால மித்திரன்	தை மீ
விநோதன்	பிப்ரவரி மீ
இந்திய விவசாயம்	மார்கழி மீ
பால விநோதனி	ஜனவரி மீ
சுதந்தர வீரன்	20-2-33
Commercial India	February
Tradesman	January
Indian Mirror	11th Feb.

வரப்பெற்ரோம்.

EMBROIDERY BORDERS.

We were in receipt of samples of various kinds of Gold & Silver embroidery Borders manufactured by Nanavati Hiralal Balabhai Jariwala, Limbu Shers, Mahidharpura, Surat. They were attractive and deserves encouragement.

நாணயமாற்றம்.
(Exchange)
(25—2—33)

	பென்சு.
பாங்குரேட் லண்டன் தந்தி	18 1/16
பாங்குரேட்லண்டன்தரிசனம்	18 1/16
லண்டன் தந்தி விற்கிற விலை.	18 3/32
தரிசன உண்டி விற்கிற விலை	18 3/32
தந்தி வாங்குகிற விலை	18 5/32
ஷை தரிசன உண்டி	18 3/16

பாரிஸ் லண்டன் மேல் தந்தி ஸ்டர்லிங் பவுன் 1-க்கு பிராங்கு 87 9/16

சிங்கப்பூர் வட்டம் விற்கும் விலை வெள்ளி 100-க்கு ரூ. 156.

சிங்கப்பூர் வட்டம் வாங்கும் விலை வெள்ளி 100-க்கு ரூ. 150.

பிரான்ஸ் மேல் தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு பிராங்கு 640.

ஜர்மனி தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு மார்க்கு 105.

அமெரிக்கா தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 397.

அமெரிக்கா தரிசன உண்டி வாங்குவது டாலர் 100-க்கு ரூ. 380.

சிங்கப்பூர் தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 156

சிங்கப்பூர் தரிசன உண்டி வாங்குவது டாலர் 100-க்கு ரூ. 150.

கப்பற்செய்தி.
(Shipping News.)

சென்னை துறைமுகத்தில் மார்ச்சு மாதத்தில் எதிர்பார்க்கப்படும் கப்பல்களின் பெயர்களும் தேதிகளும்:—

மணிலா 1, பிர்ச் பாங்க், இதியோபியா 3, சான்டிவி 4, ஸ்கின் சுப்ஜியார்டு மல்பேரா, ஹாங்கர்க் 5, கிளான் மக்னுட்டன், இரின்புரா 10, ரோஹனு 14, மார்ச்ஹார் 11, சிட்டி ஆப் பிட்ஸ்பர்க் 12, சிட்டி ஆப் யார்க் 13, மொடாசா 15, சிட்டி ஆப் ரேவல்வி 20, விகோன் டிவிஸ்வி 23, கிளான் மக்பி 24, மன்னுர் 25, மல்பேரா 29.

ஹாங்காங் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ.90

ஷாங்காய் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை டேயல் 100-க்கு ரூ. 120.

ஜப்பான் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை என் 100-க்கு ரூ. 85.

ஜாவா தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு கில்டர் 61.

ஜவா தந்தி அல்லது தரிசன உண்டி வாங்குவது ரூ. 100-க்கு கில்டர் (பெயரளவு)

லண்டன் அமெரிக்கா மேல் தந்தி ஸ்டர்லிங் பவுன் 1-க்கு டாலர் 3.41½.

T. R. RANGASAWMY NAIDU,
PAINT & GLASS MERCHANT,
341 & 342, Big Bazaar Street, TRICHINOPOLY.



All sorts of Paints, Varnishes, Colours, Enamels, etc., manufactured by well known firms & British and other make

Looking glasses, ceiling glasses, Colour glasses and ornamental glass etc.

Raja Ravi Varma pictures, British & German lady pictures, sceneries, Postcard pictures, frames Tin Plates etc.

Straw boards, Colour papers, Glass beads, Gold & Silver leaves, Copper foils, etc., for ornamenting Pandals.

Can be had at cheap rates.

INDIA'S EXPORTS.

The slight rise in the prices of Indian commodities on the London market which occurred during the July-September quarter of 1932 was not maintained during the last quarter of the year, states Mr. H. A. F. Lindsay, Indian Trade Commissioner in London, in his report for the last quarter of 1932 published in the Indian Trade Journal.

Prices sagged quietly but persistently throughout the quarter and are now in some cases even below the low levels of July last, the report continues. The tendency for the prices of all commodities to move together encourages the conclusion either that some single major influence is at work operating simultaneously throughout world markets or else that a number of depressing influences have made so to speak common cause and that the more healthy influences which usually counterbalance them are in abeyance.

The rice market is in a depressed state following contradictory rumours as to the available supplies and the strength of the Far Eastern demand. The tea market has declined steadily during the quarter but has since rallied ... more confident news of the ...pects of the restriction .... Cotton has declined ...but, like tea, has rallied somewhat with the turn of the year.

Jute has declined and during December was nearly down to the prices of July last. Castor seed has fallen slightly but the fall has been gradual. Linseed has remained on the whole fairly steady and was quoted in December at prices above the July range. Groundnut prices fell steadily during October-November, but recovered slightly during December.

The general decline of trade has been very marked throughout the three years 1930-32. There were actually no imports of wheat from India in 1932. Rice proved a welcome exception to the general rule for Imports of Indian rice into the United Kingdom which had fallen from nearly 1,000,000 tons in 1930, to less than 900,000 in 1931, recovered to over 1,100,000 in 1932.

Tea imports also increased during 1932, but will probably fall off during the current year 1933, as a result of the restriction scheme. Indian tobacco imports fell considerably between 1930 and 1931 but held their own in 1932 in spite of the decline in total imports. Hardwoods are an extremely difficult market and imports from India in 1931 were little more than half of what they had been in 1930.

The decline in the imports of cotton from India is noticeable and is due largely to the narrow margin at which since August 1931, Indian cotton has been quoted "off" middling American. It is to be hoped that the efforts of the Indian Cotton Inquiry Committee, now sitting in Manchester, will be successful in promoting the popularity of Indian cotton with Lancashire mills.

The demand for Indian wool was comparatively steady throughout the three years. Hemp recovered in 1932 much of the ground lost during 1931.

Imports of Indian linseed have fallen steadily as a result of the comparative cheapness of the Argentine product. Hides, skins and leather have suffered seriously and imports from India during 1932, though in some cases higher than they were in 1931 have not yet recovered to the levels of 1930. The demand for Indian Pig-iron fell during 1932, as compared with 1930 and 1931, but not so rapidly as the decline in total imports, of which during 1932 considerably more than half came from India.

In general it should be noted that the commodities quoted above did not all benefit from the tariff preferences which were introduced by the British Governmen... ...f Empire pro...

1932. The effect of these preferences is more noticeable from a survey of India's exports as a whole. The Indian sea-borne trade accounts for November 1932, show that during the eight months April to November of that year, the United Kingdom took 30 per cent of India's total exports as compared with 28 per cent, during the same months of 1931. A still further advance is anticipated during 1933, when the full effect of the Ottawa agreement will be felt.

As usual a large number of inquiries were received and dealt with during the quarter under report. There was, however, a distinct increase in the number of inquiries received from firms both in the United Kingdom and on the Continent, asking for information regarding exporters from India while a decrease in the number of inquiries received from India seeking to establish contact with importers in this country was also noticeable. The larger number of inquiries received at this end is undoubtedly due to the greater interest being taken in this country in goods of Empire origin on account of the preferential rates of import duties applicable to such goods, but it is difficult to suggest any explanation for the fall in the number of inquiries received from India.

Apart from the ten per cent [illegible]port d[illegible]y on foreign tim- [illegible] a genuine desire [illegible]yers to fa[illegible] Empire timbers. Freight charges and other difficulties consequent on distance handicap Indian timbers in a market where a cheap Empire hardwood is the main desideratum. Interest in Indian timbers is however, well maintained, and if the improvement in trade conditions continues this should be reflected in the demand for them.

Among inquiries of interest was one for a large quantity of Sal railway sleepers for palestine. It came to nothing as apparently freight costs in India are too high to admit of successfull competition in the foreign sleeper market.



There was no apparent improvement in the prices of metals and minerals during the quarter.

During the quarter under review, this Department participated in the following exhibitions and fairs:—

Rochester Empire Exhibition.—This exhibition was organized by the Medway Chamber of Commerce in conjunction with the Medway Towns Civic and Empire week which was held from October 3 to 8, 1932. under the joint auspices of the Mayors of Rochester Chatham and Gillingham.

Empire Shop at Cardiff.—The shop was organized by the Empire Marketing Board and was allotted to India from October 25 to November 5 1932.

On the opening day, H. R. H. Prince George visited the shop where he was received by the Indian Trade Commissioner and this visit secured a very good Press to the great advantage of the Indian display.

7th Ideal Home and Food exhibition, Edinburgh–The exhibition was held at Waverly Market. Edinburgh from November 5 to November 19. 1932. This Department had two stalls at this exhibition, one for foodstuffs and the other for brassware and Kashmir embroideries.

———

Swadeshi Slates.

Best Swadeshi slates manufactured; Slatepencils, chalks, Buttons are supplied.

Apply to:—

V. V. Krishnamurthy,
Sri Vivekananda Swadeshi Slate Works,
Markapur (M.S.M.Ry.)

WANTED

Capable agents of influence among merchants in all the important towns [illegible] canvass subscribers and to get advert[illegible] ments for "Varthaga Oolian". Li[illegible] terms to really capable workers.

Apply to:— The Manager,
Varthaga Oolian, Tri[illegible]

பகோணம்

ாமகம்

ற்சவத்திற்கு

3—1933 முதல் 13—3—1933 வரையில்)

விஜயம் செய்யுங்கள்.

மகாமக குளத்தில்

ஸ்நானம் 10-3-1933

12-வருடத்திற்கு ஒரு முறை வரும் பெரிய திருவிழா.

அத்துடன் கீழ்கண்ட ஸ்தலங்களுக்கும் விஜயம்செய்யுங்கள்.

காஞ்சிவரம்	ஸ்ரீரங்கம்
சிதம்பரம்	மதுரை
தஞ்சாவூர்	ராமேஸ்வரம்

விபரங்களுக்கும், பிரசுரங்களுக்கும், திருச்சினுப்பள்ளியிலிருக்கும் சீப் கம்மர்ஷியல் சூப்பிரண்டெண்டுக்கு எழுதுங்கள்.

தென்னிந்திய ரயில்வே கம்பெனி லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்

விஸ்வநாதன்

நகரத்தார் ஸ்பெஷல், தி

அகில இந்திய யாத்திரை வி

நம் நாட்டிலிருக்கும் அநேக சகோதர சகோதரிகள் இறைவன் அ
யும் பெற்றிருந்தும், நம் பாதகண்ட யாத்திரையை ஒரே தடவையில் சிரமப
இந்தி முதலிய பல பாஷைகள் தெரியாமலும், சிலருக்கு ஒவ்வொரு ஸ்தலங்களி
கள் இல்லாமலும், சிலருக்குச் சரியான துணை முதலியன இல்லாமலிருப்பதால்,
மான ஸ்ரீகாசி க்ஷேத்திரம் சென்று, கங்கா ஸ்நானம் செய்யாமலும், கயா சென்று
டம் போடாமலும், பாம்பே, கல்கத்தா, ஆமதாபாத், (காந்தி ஆஸ்ரமம்) முதலிய பல
களைப் பார்க்காமலுமிருக்கிறார்கள்.

இக்குறைகளை நீக்கும்பொருட்டு மனித சகாயமில்லாத ஸ்திரீகள், புருஷர்கள், வயோதி
அடியிற்கண்ட பல இடங்களையும் சுலபமாகத் தரிசிப்பதற்கு யாத்திரை காலத்தில் பல இடங்களிலும்
களின் சாமான்களை ஏற்றி இறக்காமலும், ஷை ஸ்தலங்களில் இடந்தேடி அலையாமலும், மிகவும் சௌகரிய
மாகவும், குறைந்த பணச்சிலவில் யாத்திரை செய்துவர **நகரத்தார் ஸ்பெஷல்** என்னும் பெயருடன் ஒரு
ரயில் தொடர் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

ஷை ஸ்பெஷல் ரயிலில் பிராமணர்களைக்கொண்டு சாப்பாடு முதலியன தயார் செய்யப்படும்.
புருஷத்துணையில்லாத ஸ்திரீகளுக்கும், வீடுவிட்டு விலகுகிற ஸ்திரீகளுக்கும், பிரத்தியேக இடமுண்டு.
ஷை ஸ்பெஷல் ரயிலில் ஒரு டாக்டர் கூடவே வருவார்.

போய்வரக்கூடிய இடங்களின் விபரம்

திருப்பதி, துங்கபத்திரா, கிருஷ்ணா, பண்டரிபுரம், நாசிக்பஞ்சவடி, பாம்பே, புரோச், பரோடா
ஆமதாபாத், (சபர்மதி ஆஸ்ரமம்) துவாரகை, ஜாம்நகர், தாகூர், உஜ்ஜனி, ஆக்ரா, மதுரா, பிருந்தாவனம்,
டெல்லி, குருக்ஷேத்திரம், ரிஷிகேசம், ஹரித்துவாரம், நைமிசாரண்யம், லக்ஷ்மணபுரி, அயோத்தி, நந்திக்
கிராமம், பிரயாகை, ஸ்ரீகாசி, ஸ்ரீகயா, கல்கத்தா, பூரிஜகந்நாதம், விசாகப்பட்டணம், கோதாவரி,
காளாஸ்திரி, திருப்பாதிருப்புலியூர், (ஞானியார் மடம்) சிதம்பரம், மதுரை, இராமநாதபுரம், தனுஷ்கோடி,
இராமேஸ்வரம், முதலிய இன்னும் பல இடங்களும்.

ஷை ஸ்பெஷல் ரயில் 27—3—33 ல் திருச்சி ஜங்ஷனிலிருந்து புறப்பட்டு 28—5—33 ல் திரும்
பவும் திருச்சி வந்து சேரும்.

இதில் கண்ட எல்லா இடங்களுக்கும் போய்வர ரயில்சார்ஜமட்டும் 2-வது வகுப்புக்கு ரூ.245,
3-வது வகுப்புக்கு ரூ.120, விரும்புபவர்கள் 2-வது வகுப்புக்கு ரூ.45 ம், 3-வது வகுப்புக்கு ரூ. 20 ம்,
முன் பணமனுப்பி ரிசர்வு செய்துகொள்ளவேணும். ஷை ஸ்பெஷலில் சாப்பிட விரும்புபவர்கள் இரண்டு
வேளை சாப்பாடு, இரண்டுவேளை டிப்பனுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 25 வீதம் முன்பணமனுப்பி ஏற்பாடு
செய்துகொள்ளவேணும். பாக்கிப்படுகிற தொகையை 15—3—33 க்குள் அனுப்பிவிடவேணும்.

குறிப்பு:—இதுவிஷயமாக செலுத்தும் தொகையை நேரே நமக்காவது அல்லது திருநிதி பாங்கு லிமிடெட்,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி என்ற பாங்காருக்காவது அனுப்பி ரசீது பெற்றுக்
கொள்ளவும். இதர விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

விஸ்வநாதன் & கோ.,

ந. 2, சின்னக்கடைத்தெரு, மலைவாசற்படி, திருச்சி

...hinopoly. Edited & Published by T. V...
...S. Buildings, Big Bazaar St. Tri...